www.tamilarangam.net

3F

# தேனீ

புரட்டாசி

THENEE SEPTEMPER 1989



மனிதநேயங்களை
மரணித்த மனித உருவங்களை
மனிதத்துவம்
ஓர்நாள் தோற்கடிக்கும்
– செழியன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தான் இடத்தைப் பிடிப்பார்

நீர் அகல நினைக்கும்
நிலங்களாக வார் இடங்களும்
வார் இடங் களாக
யார் இருப்பார்?

நீர் புலியின் வாசகந்தான்
போர் புரிந்தால் மாறிடுமோ
நீர் விரும்பும் நிலத்தையெல்லாம்
யார் அடக்கிக் கொள்ளாதோ
ஊர் அழிந்த போகையிலே
உன் பெயர்தான் நிலையாமோ?

தணல் எரியும் இடமாக
பிளவு பட்டநிலமாக
குழிதோண்டக் குடைந்தெடுக்க
கொத்த வெட்ட சொல்
கொடுமை எல்லாம் செய்ய
சுளியோடு நீர் வந்த
விளிவழியோடு ஓட

பார் பார் எனப்பகர
யார் யார் என நினைக்க
நடந்தவைகள் நேற்றுப்போல்
காற்றினிலே போக

இரத்த
ஆற்றினிலே மிதந்தவரும்
அழுக்கவரும் அழுந்தவரும்
சேற்றினிலே
புதைந்தவரும் புதைத்தவருமா–
எல்லோரும் ஓர் நாளில்
ஒன்றாகும் நேரம்

உயிரற்ற பிணமாக
ஒதுங்கும் கரையினிலே
எமைத்தின்ன.....!
கழுகு நரி ஓநாய் என
விலங்கும் பறவைகளும்
இடம் மாறி விட்டுவிட்டுச்
செல் சத்தம் வேண்டுமென்ற
நினைத்த
அடங்காத தாகத்தால்
மனிக்கிடங்காக மாடத்தை
தோண்டித் தான்
இடத்தைப் பிடிப்பார்.

படை

---

கண்ணீர் அஞ்சலிகள்
அன்மையில் மறைந்த தொழிற்சங்கவாதியும்
முன்னாள் யாழ்ப்பாண துணை மேயருமான
தோழர் துரைராசசிங்கத்திற்கு அஞ்சலிகள்!.

தேனீக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்கு தேனீயின் அன்பான வணக்கங்கள்.

எமது தமிழ் பேசும் பகுதிகளில் யுத்தநிலைமைகளைக் கூடுதலான வரைக்கும் தவிர்ப்பதோடு அழிவுகளிலிருந்தும் பாரிய நெருக்கடிகளிலிருந்து விடுபடச்செய்வதை விட வேறு தமிழ் பேசும் மக்களுக்குச் செய்யும் ஒரு பெரிய "உதவி" இன்றைய நிலையில் இருக்கவேமுடியாது. இதை நன்கு தெரிந்த பின்பும் தொடரும் நடவடிக்கைகளை இயக்குபவர்கள் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருக்கவும் முடியாது .

தமிழ்பேசும் பிரதேசங்களில் மக்களின் பாதுகாப்பைப்பற்றி சிறிதளவேனும் சிந்திக்காமல் கண்மூடித்தனமான நடவடிக்கைகளில் ஆயுதம் ஏந்துபவர்கள் ஈடுபடுவதும் பதில் நடவடிக்கையாக இராணுவத்தினர் ஈடுபடும்போது ஏராளமான அப்பாவி மக்களின் உயிர் பலியாவதும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

ஜனநாயக சூழலை மக்கள் அங்கீகரித்தாலும் ஆயுதஅராஜகம் அங்கீகரிப்பதாக வில்லை.

என்ன காரணங்கள் சொல்லப்பட்டாலும் இத்தகைய சூழ்நிலைமையை மக்கள் "இன்னும்" விரும்புகிறார்கள் என்பதைவிட பெரிய பொய்யும் இருக்கமுடியாது.

எனவே இத்தகைய "அச்சுறுத்தும் சூழ்நிலைகள்" தொடருமாயின் நன்மையடைவது யார் என்பது தெளிவாகத்தெரிகிறது ஏனெனில் மறுபுறத்தில் ஆளும் சிறிலங்கா அரசாங்கமும் தமிழ்பேசும் மக்கள் சார்பாகவும், அவர்களது அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகவும் எந்தவகையான தீர்வு முன்வைக்கப்படுகின்ற பொழுதும் அவற்றைப் புறக்கணிப்பதிலும் முட்டுக்கட்டையாகவிருந்து இழுத்தடிப்பதிலுமே ஆர்வம் காட்டிவருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது மாத்திரமின்றி நாட்டின் தற்போதைய பிரச்சனைகளுக்கு மூலகாரணம் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சனை தான் என்பதை புரிந்து கொண்ட பின்னரும், அதற்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலமே அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவரமுடியும் என்று தெரிந்த பின்னருங்கூட அந்த அடிப்படையில் பிரச்சனைகளை அணுகாமல் குழப்ப நிலைகளைப் பேணுவதிலேயே கவனம் செலுத்தியும் வருகிறது...

இதுவரை கால அழிவுகளுக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவிமக்களின் உயிரிழப்புகளுக்கும் காரணமாய் அமைந்த இனவாத அரசியலை இன்றுங்கூட கூசாமல் அதே சிறிலங்கா அரசு கடைப்பிடித்து வருவதை வெளிப்படையாகக் காணக்கூடியதாகவிருக்கிறது.-

ஒரு ஜனநாயக சூழல் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுகின்ற போதுங்கூட தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும்,
அவர்கள் சுபீட்சமாக வாழ்வதற்காகவும் ஏற்படுத்தப்படும் "எந்த" ஒரு வடிவத்தையும் எதிர்ப்பதிலும், புறக்கணிப்பதிலும் காலத்தைக் கடத்த முயற்சித்துவருகின்றது.

எது எப்படி இருப்பினும் தமிழ்மக்களின் பிரச்சனைகள் பற்றி டெல்லியிலும், கொழும்பிலும் இலங்கை அரசும் இந்திய அரசும் கலந்துரையாடிய காலம் போய் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை அவர்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலும் மாகாணசபைகளிலும் அங்கம் வகிக்கும் நிலையை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்க விடயம் தான்.
ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா அரசை நேரடியாக முகம் கொடுத்து மக்களின் தேவைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்தகைய 'மேடை' களைப் பாவிப்பது அவசியப்படுகின்றது.

இன்றைய காலக்கட்டத்தில் உண்மையான ஐக்கியத்தின் தேவையை நன்கு உணர்ந்து மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுப்பதற்காக தமது நேச சக்திகளுடன் புரிந்துணர்வோடு செயற்பட வேண்டியது மக்களின் அக்கறைகொண்ட தமிழ் அமைப்புக்களின் தற்போதைய கடமையாகும்.

www.tamilarangam.net

அடிப்படைக்கருத்து வித்தியாசங்கள் இருந்தபோதும் தமக்குள் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் சிங்கள இனவாதிகளை பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உரிய முறையில் எதிர்கொண்டு எமது மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டினைத் தெளிவு படுத்தவேண்டியதோடு சிறிலங்கா ஆட்சியாளர்களினதும் இனவாதிகளதும் தாக்குதல்களிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கான அனைத்து வழிகளையும் கடைப்பிடிக்கவேண்டும்.

இவற்றோடு பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களினது, பிரதேசங்களினதும் அபிவிருத்திகளையும், அவற்றிற்கான பொருளாதாரத்திட்டங்களையும் மேற்கொள்வதுடன் நாட்டின் வருங்காலத்திற்கான திட்டங்களையும் ஒழுங்குபடுத்தவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பையும் ஸ்திரமான வருங்காலத்திற்கான உத்தரவாதத்தினையும் உருவாக்கிக் கொடுக்கமுடியும். அந்நியப்படைகள் நிலைகொண்டிருப்பதைத் தடுக்கமுடியும்.

சிறிலங்கா அரசுடன் பின்கதவுகளால் பேசும் நிலையை முற்றாக நிராகரித்து புரிந்துணர்வோடு இணைந்த நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

"தமிழ் தேசிய சபை" இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதும், பாராளுமன்றத்தில் "ஒன்றியம்" மூலம் இணைந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதும் முன்னோக்கிய வளர்ச்சிகளாக அமைகின்றன. தமிழ் பேசும் மக்களின் கௌரவமான எதிர்காலத்திற்கு அத்திவாரமிடுபவையாக இத்தகைய நடவடிக்கைகள் அமைகின்றன...

—தேனீக்கள்

---

அன்பின் வாசகர்களே,

உங்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை, விமர்சனங்கள் ஆகியவற்றை தேனீ எதிர்பார்க்கின்றது. தேனீயில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்பாளிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவள் பொதுவுடமையாக்கப்பட்டாள்...

கவிதாஞ்சலி

சீதை !
சீதை !
சீதை !
கூப்பிடுபவள்
இராமனுமல்ல ; இராவணனுமல்ல !
அவளும் ,
அயோத்தியிலுமில்லை ; இலங்கையிலுமில்லை !
ஆமாம் !
நீதிமன்றத்தில் ; கோர்டில் ...
அவள் ,
முதலாளித்துவ ; மூலதனம்
பெற்றெடுத்த பொதுக் குழந்தை !
சமூக விதிகளுக்குக் கட்டுப்பட்டுப் பார்த்து ,
வயிற்றுப் பசி தாளாது
தன்னையே —
விற்று வந்த சுயசந்தை !
நியாயம் ,
கற்பிக்கும் தொழில்களில்
தனக்கு
எந்த பங்கும் இல்லாததால்
தன்னுடலையே —
தொழிற்சாலையாக்கிய எந்திரமவள்

வயிற்றுக்கு ,
ஊறு செய்யும் நம்முடைய
சமூக விதி ; நீதிபதிகள்
அவளுக்கு ,
வெவ்வேறு நாமமிட்டு மகிழ்கின்றன(ர்)

விபசாரி
விலைமாது
இன்னும் பல ...!

அவள் ,
விபச்சாரி — விலைமாதல்ல ;
கல்யாணச் சந்தையில் சீதனப்
போத்தால் விலைப்படாமற் போனவள் !
பாவியல்ல ; அவள் அப்பாவி !

பண்பாடு பண்பாடென்று ,
பெண் படும் பாடு
பெரும் பாடாய்ப் போச்சு !
பொருளா ; தாரத்தில்
நீதி நோக்கும் இராமர்களால் ,
அவள் —
பொதுவுடமையாக்கப்பட்டாள் .

எலும்பற்ற நாவால்
எள்ளி நகையாடும்
சமூக நீதிவான்களே !
அவளுக்கு ,
வாழ்வு கொடுங்கள் ;
இல்லையேல் வழியை விடுங்கள் !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

# நிகழ்வுகள்

**- குரு**

மழைபெய்து ஓய்ந்து நீண்ட நேரமானலும், வெள்ளமானது பள்ளங்களை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. முற்றத்தில் பெரிதாக நின்ற மாமரத்தின் இலைகள் ஒரு கணம் காற்றில் சிலிர்த்துக் கொண்டதில் தேங்கி நின்ற மழைத்துளிகள் நிலத்தில் சிந்திக் கொண்டன.

தாழ்வாரமாக மழைக்கு ஒதுங்கி நின்ற கோழி தலைச் சிறகுகளை விரித்து ஈரத்தைத்போக்க முயற்சித்தது.

"மகேசு வந்து சாப்பிடன்... சாப்பாடு ஆறிய ல்லா போகுது"

குசினியிலிருந்து மீனாட்சியின் குரல் நாலாவது தடவையாக ஒலித்தது.

இரண்டு மணித்தியாலயமாக திண்ணையில் இருந்து மழையை ரசித்துக் கொண்டிருந்த மகேசுவிற்கு எழுந்து போக மனம் வரவில்லை.

ஆறு ஆண்டுகள்... சிறைச்சாலையில் அரசியல் கைதியாக வாழ்ந்த அவன் அண்மையில்தான் விடுதலையாகி ஊருக்கு வந்திருந்தான்.

'மகேசு, அம்மா எவ்வளவு நேரமா கூப்பிடுறா, போய்ச் சாப்பிடன், இப்படியே எவ்வளவு நேரத்திற்கு முற்றத்தையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாய்'

தையல் இயந்திரத்தில் துணி ஒன்றை தைத்துக் கொண்டிருந்த அவனது அக்கா புவனம் தைப்பதை நிறுத்தி விட்டு அவனை நோக்கி வந்தாள்.

'பஞ்சியைப் பார்க்காம நீ போய் எடுத்துக்கொண்டு வாவன், எனக்கு இன்று முழுக்க இதில இருக்கவேணும் போலிருக்கு'

அக்காவிற்கு பதில் கூறிவிட்டு திரும்பவும் முற்றத்தை நோக்கிய சிந்தனையில் ஆழ்ந்து போனன்.

சின்ன வயதில் மழை வெள்ளத்தில் காலால் பந்தடித்த நினைவுகள், கூடவே முற்றத்து மாமரத்தில் ஊஞ்சல் கட்டி நண்பர்களுடன் கும்மாளம் அடித்து, விளையாடிய அந்த சின்ன வயது சந்தோசங்கள்......

மகேசுவிடமிருந்து பெரிதாக கொட்டாவி ஒன்று வெளிப்பட்டது.

"இந்தா சாப்பிடு, கனநேரமானதில சாப்பாடும் ஆறிப் போயிட்டுது"

அக்கா அவனை நோக்கி சாப்பாடு போட்டிருந்த தட்டை நீட்டினாள்.

'ஏன் நீ சாப்பிடல, எனக்கு மட்டும் கொண்டாந்திருக்கிற'

சாப்பாட்டுத்தட்டை வாங்கியபடி மகேசு கேட்டான்.

'நான் இன்டைக்கு விரதம்.... மறந்தா போட்டாய், வெள்ளிக்கிழமை அதுவுமா, ஜெயிலுக்குப் போனதில இருந்து நீ எல்லாத்தையும் மறந்து போட்டாய்'

அக்கா அவனுக்கருகில் அமர்ந்து கொண்டாள்.

மண்கிடங்கு சுகம் பெய்த மழையில் பறிபோனதால் வீட்டின் நாய் உயரத்தில் திண்ணையோரமாக படுத்துக் கிடந்தது.

'நீயும்தான் வருசாவருசமாக தவறாம விரதம் பிடிச்சு கொண்டு வாறாய், என்ன பலன்! சாப்பிடாம இருந்ததுதான் மிச்சம்!

மகேசு அக்காவைப் பார்த்தான்.

அக்கா மெதுவாக சிரித்துக் கொண்டாள். அவளுக்கும் முப்பதாகி விட்டது. இந்த ஊரைத் தவிர; அவள் வேறெங்கும் அதிகம் போனதில்லை. நாட்டின் நிலமைகள் மனித உயிர்களை பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு தள்ளிய காலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்து அவள் வீட்டை விட்டு வெளியே போவதை தவிர்த்துக் கொண்டாள்.

மகேசு ஆறு வருடத்திற்கு முன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு போனதும், அதற்கடுத்த வருடம் பஸ் சாரதியாக இருந்த அவனது அப்பா சண்முகம் கடமை நேரத்தில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதும் குடும்ப பொறுப்பு அவள் தலையில் விழுந்தது.

வீட்டின்பேரில் ஏற்கனவே இருந்த கடன்களும் குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கான வருமானமும் புவனத்தை தையல் இயந்திரத்துடன் பிணைத்துவிட, ஐந்து வருடங்கள் இயந்திரமாக வாழ்ந்து விட்டாள்.

மகேசு சிறையிலிருந்து விடுதலையாகி திரும்பி வந்தது, அவளுக்கு சந்தோசமாக இருந்தாலும் நாட்டுநிலைமைகள் அவன் மீதான பயத்தை அவளிடம் ஏற்படுத்தியிருந்தன

"என்ன அதுக்குள்ள எழுந்திட்டாய், கொண்டாவன் இன்னும் கொஞ்சம் போட்டண்டு வாறன்'

சாப்பிட்டு எழுந்து போனவனை அக்கா தடுத்து நிறுத்தினாள்.

'இல்லை எனக்கு காணும்...வயிறு நிறைஞ்சு போட்டுது, இதுக்கு மேல சாப்பிட்டா தொந்திதான் வைக்கும்"

மகேசு சிரித்தபடி கை கழுவ எழுந்து போனான்.

முந்தியென்றால் விழுந்து விழுந்து சாப்பிடுவான், இப்ப வயிறெல்லாம் ஜெயில் சாப்பாட்டால சுருங்கிப் போட்டுது போல, பாவம் ஆறு வருடங்கள் அந்த நாலு சுவருக்குள்ள சித்திரவதைகளையும் தாங்கி......

புவனு அவன் கைகள் கழுவும் வரை அவனைப் பார்த்துகொண்டிருந்து விட்டு உள்ளே எழுந்து போனாள்.

மகேசு கைகளை கழுவி விட்டு, கட்டியிருந்த சாரத்தில் துடைத்துவிட்டு திரும்பிய போது படலை திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

நடராசா மாஸ்டர் வந்து கொண்டிருந்தார்.

வணக்கம் தம்பி!' எப்படி சுகமே, நீர் வந்திருக்கிறதை கேள்விப்பட்டனன்! அப்படியே பார்த்திட்டு, தைக்கக்குடுத்த துணியையும் எடுத்திட்டு போவமென்டு வந்தன்'

'எனக்கென்ன மாஸ்டர், நான் நல்லா இ க்கிறன், நீங்கள்தான் மெலிஞ்சிருக்கிறியள் போல'

மகேசு சிரித்தபடி மாஸ்டருடன் வீட்டிற்கு போனான்.

அதுவரை படுத்துக் கிடந்த நாய் பழக்கமான ஆளை கண் விட்ட சந்தோசத்தில் மாஸ்டர் மேல் தாவி அன்பைக்கா ட்டியது.

'வாங்க மாஸ்டர்! வீட்டில எல்லாரும் சுக குசினிக்குள் இருந்து மீனாட்சி வெளிப்பட்டாள்.

"ஓம் தங்கச்சி, சுகமாயிருக்கினம், இன்டைக் வாறதாயிருந்தது போய்ட்டு மழை என்டாப்போல நின்டுபோ ட்டினம்'

மாஸ்டர் அருகிலிருந்த கதிரையில் அமர்ந்துகொண்டார். நடராசா மாஸ்டர் அவர்களுக்கு தூரத்து உற வுமட்டுமல்ல, மகேசின் அப்பாவின் நெருங்கிய சிநேகிதர் என்கிற தொடர்பும் அந்த குடும்பத்துடன் அவருக்கு ஒரு பற்றுதலையும் ஏற்படுத்தியிருந்தது.

மகேசுவை இராணுவம் பிடித்துப் போன பின்னும், அப்பா சண்முகம் இறந்த பின்னும் மாஸ்டரின் குடும்பம்தான் மீனாட்சிக்கும், புவனத்திற்கும் ஆறுதலாக இருந்தது.

புவனத்திற்கு தையல் இயந்திரத்தை வாங்கிக் கொடுத்து மாஸ்டர் அவர்களின் வருமானத்திற்கு வழிசெய்து கொடுத்தார்.

"மாஸ்டர் உங்கட துணியெல்லாம் தைச்சு முடிச்சிட்டன்; இனி பட்டன் தைக்கிறதுதான் பாக்கி, நீங்க போகேக்க எல்லாம் முடிச்சிட்டு தந்து விடுகிறன்'

புவனம் அவசரஅவசரமாக சட்டைகளுக்கு பொத்தான் தைப்பதில் ஈடுபடத் தொடங்கினாள்.

வேகமாக வாசலுக்குள் ஓடிவந்த கோழி ஒன்று இவர்களைக் கண்டு திரும்பிப் போனது.

www.tamilarangam.net

அம்மா குசினியில் தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

'இனி என்ன செய்யிறதா உத்தேசம், திரும்பவும் அரசியல் அது இது என்டு போறதா இல்ல, வீட்டை கவனிக்கிறதா முடிவேதும்......"

மாஸ்டர் கேள்விக்குறியுடன் மகேசைப் பார்த்தார்.

' இந்த கண்டறியாத அரசியலை விட்டுப் போட்டு, அலுவலைப் பார்க்க சொல்லுங்கோ மாஸ்டர், ஆறு வருசமா வருவானு, வரமாட்டானு என்று எத்தனை சாமிகளுக்கு நேர்த்தி வைச்சு, நாங்க பட்டபாடு அந்த கடவுளுக்குத்தான் தெரியும்'

அம்மா தேநீர்க் கோப்பையை மாஸ்டரிடம் நீட்டினாள். மகேசு விடுதலையாகி வந்ததில் இருந்து நாட்டில் இடம் பெற்ற நிகழ்வுகள் அவனுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

புவனம் கல்யாணம் ஆகாமல் இருப்பதும், அவளின் வயது ஏறிக் கொண்டிருப்பதையும் அம்மா அடிக்கடி சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள்.

...... இப்ப உள்ள நிலமைகளைப் பார்த்தா பிரச்சினை ஒரு தீர்வுக்கு வருமென்டு சொல்லேலாது தம்பி, வில்லவாசிகள் ஒரு பக்கம் சனங்களைத் தின்று கொண்டு இருக்குது, இன்னொரு பக்கம் ஆட்களைக் கொல்லுறதும் நடந்து கொண்டிருக்குது. இதுக்குள்ள போய் சீரழிகிறதை விட உம்மட அலுவல்களைப் பார்க்கிறதுதான் எனக்கு சரியென்டு படுகுது'

மகேசு கால்களை மடக்கிக் கொண்டு மாஸ்டர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'உன்ன மாதிரி எத்தனை பெடியள் எல்லாப் பிரச்சினைகளையும் போராட்டத்தால தீர்க்கலாமென்று போய்க்கடைசில தங்களையும் அழிச்சு....இந்த நிலமைக்கு கொண்டு வந்து விட்டுப் போட்டினம், இதுக்குப் பிறகும் இருக்கிற இந்த நிலமைய சரியாக பயன்படுத்தாமல் விட்டா எல்லாமே குட்டிச் சுவராகிப் போயிடுமெல்ல.....,

.....இன்னும் பெடியங்களைப்பார்த்தியா, தங்களுக்குள்ள சுடுபட்டுக் கொண்டிருக்கிறுங்கள். இவங்கட சண்டைகளை முதல்ல நிப்பாட்டினத்தானே பிரச்சினைகளைப்பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும். ஆரிட்டப் போய் இதுகளைக் கேட்கிறது. துவக்குகள கையில வைச்சுக்கொண்டு நியாயத்தை பற்றி பேசமுடியுமே'

"இதையெல்லாம் இவ்வளவு காலம் இருந்து பார்த்தாப் பிறகுதான் நான் சொல்லுறன், நீர் இதுகளோட மினக்கெடுவதை விட்டுப் போட்டு வீட்டுப் பிரச்சினைகளை கவனிக்கிறதுதான் நல்லது, அம்மாவையும், அக்காவையும் எவ்வளவு காலத்திற்குத்தான் கஸ்டப்பட வைக்கப் போறீர்.

வெளியே மழைபடி மழை தூறத் தொடங்கியது. உலவப் போயிருந்த நாய் மழையைக் கண்டு வீட்டிற்குள் ஓடி வந்தது.

'இப்பதானே எல்லாரும் உழைக்க என்டும், இதுகளின இருந்து தப்பவென்டும் வெளிநாடுகளுக்குப் போகுதுகள், இவனையும் அப்படி எங்கேயாவது அனுப்பினு எனக்கும் நிம்மதி இவனுக்கும் ஒரு வழி பிறந்த மாதிரி'

அம்மா தனது பங்கிற்கு கவலையைக் கொட்டினாள். இவர்களது சம்பாசனையைக் கேட்டுக் கொண்டு அக்கா தனது அலுவல்களில் கவனமாக இருந்தாள்.

'நீர் வெளியில போகிறதென்டால் அதுக்கான அலுவல்களைப் பார்க்கலாம் தம்பி! இப்ப கனசனம் வெளியில போய்க் கொண்டுதானிருக்குது. காசுதான் பிரச்சினையாக இருக்கும். எதுக்கும் நீர் என்ன முடிவு எடுக்கப்போகிறீர் என்பதைப் பொறுத்துத்தான் எதையும் செய்யலாம்'

மகேசு விரல்களால் நிலத்தை கீறிக் கொண்டிருந்தான். அவனுக்குள் இவர்களது புது யோசனைகள் போராட்டத்தை ஏற்படுத்தத் தொடங்கின. இவ்வளவு காலமும் அம்மாவையும் அக்காவையும் பிரிந்து இருந்து போட்டு அப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவின் சாவிற்கும் வரேலாமல் இருந்தும்....இப்ப வெளி யில வந்து இவர்களோடு இருப்பமென்டால்,......:

மகேசு அக்காவைப் பார்த்தான். அவள் இது பற்றி எதுவும் சொல்லும் நிலையில் இல்லை. தன்னுடைய பிரச்சினையை சுட்டிக் காட்டி மகேசுவை வெளிநாட்டிற்கு அனுப்புவதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மகேசு இது பற்றி என்ன சொல்லப்போகிறான்? என்பதில் அவள் கவனமாக இருந்தாள்.

'வெளிநாடு போறதென்டால் சும்மாவே, எவ்வளவு காசு வேணும். இப்ப இருக்கிற நிலையில் யாரட்டப்போய்க் கேட்கிறது. எல்லாத்துக்கும் முதல் அக்காவிற்கு ஒரு நல்ல இடமாப் பார்த்து கல்யாணம் செய்ய வேணும் என்டு அம்மா நிற்கிற, இந்த நிலமையில நான் வெளிநாடு போறதைப் பற்றி எப்படி மாஸ்டர் யோசிக்கிறது. எனக்கென்டா அம்மாவையும், அக்காவையும் இனியும் பிரிஞ்சிருக்க விருப்பமில்லை'

வெளியே காற்றுக்கு தென்னை ஓலையொன்று முறிந்து விழும் சத்தம் கேட்டது. மகேசு தொடர்ந்து கதைத்துக் கொண்டேயிருந்தான். வெளிநாட்டு பயணம் பற்றிய விவாதம் நிறுத்தப்பட்டு மகேசு தனது சிறைச்சாலை அனுபவங்களைச் சொல்லி முடித்தபோது மழை தனது தூறலை நிறுத்திக் கொண்டது.

'எனக்கும் நேரமாச்சுப் போல, நான் வெளிக்கிறன் தம்பி!. நீர் என்ன முடிவெடுக்கிறதைப்பற்றி சரியாக யோசித்துச் செய்யும். எதுக்கும் நாளைக்கொருக்கா என்னிட்ட வந்திட்டுப் போம்'

மாஸ்டர் குடையை எடுத்துக் கொண்டு புறப்பட ஆயுத்தமானார்.

'அப்ப நான் போயிட்டு வாறன், தம்பி நான் சொன்னதை வடிவாக யோசிச்சுப் பாரும் என்ன'

மாஸ்டருடன் மகேஸ் படலை வரை போய் வந்தான்.

வானத்தில் கருமேகங்கள் கலைந்து போய்க் கொண்டிருந் தன. நிலத்தில் காணப்பட்ட குழிகளில் வெள்ளம் நிறைந்து நின்றது.

அன்றிரவு,

மகேசுவிற்கு தூக்கம் வரப்பிடிக்கவில்லை. அக்கா படு த்துக் கிடந்தபடி சிமினி விளக்கில் 'நாவல்' ஒன்றை படித் துக் கொண்டிருந்தாள். அம்மா ஏற்கனவே நித்திரையாகிப் போய் விட்டிருந்தாள்.

இவன் புரண்டு, புரண்டு படுப்பதை இடையிடை யே அக்கா கவனித்துக் கொண்டுதானிருந்தாள். அவனது சிந்தனையை ஏன் குழப்புவான் என்று எதுவும் சொல்லவில்

நேரம் நிமிடங்களாக, வினாடிகளாக கரைந்து கொண்டிருந்தன. தூக்கம் கொள்ளாமல் மகேசு வெளியே போர்வையுடன் எழுந்து போனான்.

மெல்லிய குளிர் காற்று உடலை சில்லிட வைக்க அப்படியே திண்ணையில் அமர்ந்து கொண்டான். பெ தாக கொட்டாவி அவனிடமிருந்து வெளிப்பட்டது.

'என்ன நித்திரை வரலப் போலிருக்கு'

அக்கா அவனருகில் வந்து அமர்ந்து கொண்டாள். அவள் நாவலை அப்போதுதான் படித்து மு திருந்தாள்.

'எல்லாம் வெளி நாட்டிற்கு போறதைப் பற்றித்தான். அதுவும் சும்மாவா, எவ்வளவு அலுவல்கள் பா க்கவேணும், காசு மாற வேணும், பாஸ்போர்ட் அலு வல் அது, இது என்று.......

மகேசு பெரிதாக அலுத்துக் கொண்டான். அக்காவிற்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவ னது வாழ்க்கையில் எதுவித சந்தோசமும் கிடையாது. அவ னுடன் படித்த சிநேகிதர்களெல்லாம் வெளிநாடுகளில் சந் தோசமாக இருப்பதை அவள் அறிவாள், பலர் இங்கு வந் து கல்யாணம் கட்டிக் கொண்டு போனதும் சிலர் வீடு தே வந்து மகேசை விசாரித்தும் போயிருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'உனக்கு நான் வெளிநாடு போகிறது விருப்பமா இல்லையா?'

'...............'

"சொல்லக்கா, உனக்கு விருப்பமா, இல்லையா?'

"நீ எனக்கு கல்யாணம் நடக்கவேணும், நான் நல்ல வாழவேணும் என்டு நீ வெளிநாடு போறதாக இருந்தா எனக்கு விருப்பமில்லை, அப்பா போனபின் அம்மாவும் நானும் நீயில்லாம பட்டபாடு எங்களுக்குத்தான் தெரியும்..

" ஆறு வருசமா இருண்டு போய் கிடந்த இந்த வீட்டில நீ வந்தாப் பிறகுதான் கொஞ்சமாவது சந்தோசமா இருக்கு, திரும்பவும் நீ எங்கள விட்டிட்டு போறதென்டதை நினைச்சா என்னால தாங்கேலாதடா.....,

அக்கா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

....என்ர வாழ்க்கை நல்லா அமையவேணும் என்டோ, எனக்கு கல்யாணம் நடக்க் வேணும் என்டோ நான் எதையும் கற்பனை பண்ணி வைக்கேல, இப்ப நாங்க இருக்கிற மாதிரி இருந்திட்டுப் போகலாம். ஆது உனக்கு எது சரியென்டு படுதோ அதைச் செய்; எனக்காக நீ கஷ்டப்படவோ சிரமப்படவோ வேணும், இதைத்தான் என்னால சொல்ல முடியும்.

"இதுக்காக வீணா யோசிச்சு மூளையைக் குழப்பிக் கொள்ளாதை"

அக்கா எழுந்து உள்ளே போனாள். மகேசு போர்வையை கழுத்து வரை இழுத்து போர்த்தபடி அப்படியே திண்ணைச் சுவருடன் சாய்ந்து கொண்டான்.

அடுத்த நாள் காலை,

வழக்கம் போல பறவைகள் ஆரவாரப் பட்டுக் கொண்டிருந்தன. சூரிய ஒளி வீட்டுக்குள் பரவ ஆரம்பித்தது. மகேசு படுக்கையை விட்டெழுந்தான். வெறுமனே திண்ணையில் படுத்திருந்த தலை பக்கத்தில் தலையணை போடப்பட்டிருந்தது.

யார் போட்டிருப்பார்கள்?

அம்மாவோ அக்காவோ இருக்கலாம்,

இரவு சரியாக நித்திரை கூடக்கொள்ளவில்லை. பெரிதாக கொட்டாவி வெளியாகியது.

அப்படியே திண்ணையில் இருந்து இறங்கி முற்றத்திற்கு வந்தான். நேற்று பெய்த மழையினால் சீர்கெட்டுப் போயிருந்த முற்றத்தை சரியாக்குவதில் அக்கா ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

குசினிக்குள் இருந்து மேலே புகைக் கூட்டம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அம்மா தனது வேலையை ஆரம்பித்து விட்டாள்,

'என்ன விடிஞ்சாச்சுப் போல, இரவும் யோசனையால நித்திரையும் சரியா கொள்ளேல'

அக்கா இவனைப் பார்த்து சிரித்தாள்.

"முடிவெடுத்திட்டியோ, அம்மா விடிய என்னைக் கேட்டா, நான் ஒன்டும் சொல்லேல"

"இல்ல நான் போகப் போறதில்ல, இஞ்ச இருந்து ஏதாவது செய்யத்தான் இருக்கு, வெளிநாட்டுக்குப்போய் இருக்கிற கடன்களை கட்டி அதுக்கு வேறையா உழைச்சு...

'.... அதைவிட இஞ்ச, உங்களோட இருக்கப் போகிறன். நாட்டில எவ்வளவோ சனம் இந்தப் பிரச்சினைகளுக்குள்ள சீவிச்சுக் கொண்டுதானே இருக்குதுகள். அதுகளட பிரச்சினையை விட எங்களுக்கு மோசமா என்ன?'

மகேசு சொல்லி விட்டு கிணற்றடியை நோக்கிப் போனான். அவனுடைய பதிலில் ஏற்பட்ட திருப்தி அக்காவின் முகத்தில் தெரிந்தது.

அவளுக்கு இப்போ சந்தோசமாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அம்மா,

"என்ன பிள்ள மகேசு எழும்பிப்பானா?"

குசினிக்குள் இருந்த அம்மா தேநீர் கோப்பைகளுடன் வெளிப்பட்டாள்.

மகேசு கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டிருந்தான். கோழி ஒன்று தனது குஞ்சுகளுடன் உணவு வேட்டையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

"அவன் ஏதும் முடிவெடுத்திருக்கிறானா?"

அம்மா தேநீர் கோப்பையை புவனத்திடம் நீட்டியபடி கேட்டாள்.

"ஆள் போற யோசனையில் இல்லையாம்"

"அப்ப என்ன செய்யப் போறானாம்?"

"இஞ்ச இருந்து ஏதாவது செய்யப் போறாராம்"

"இந்தப் பிரச்சினைகளுக்குள்ள என்ன செய்யப் போறானாம்?"

"......................"

'அம்மா எனக்கு வெளில போக விருப்பமில்ல, இதுதான் என்ர முடிவு, என்ன இதுக்கு மேல வற்புறுத்தாதீங்க'

மகேசு முகத்தை துவாயால் துடைத்தபடி இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"அப்ப இஞ்ச இருந்து இவன்ர அலுவல்களைப் பார்க்கலாம் என்டு நினைக்கிறியோ, அதோட மற்றக் கடன்களை எப்படி தீர்க்கிறது, எவ்வளவு காலத்திற்கு கடனைத் தந்தாக்களுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறது'

"இவ்வளவு நாளும் எப்படியோ சமாளிச்சு இருந்தனுங்கதானே, பாவம் எவ்வளவு கஸ்டங்களை உள்ளேயிருந்து அனுபவிச்சுப் போட்டு வெளிய வந்திருக்கிறான், அவனைப் போய் ஏன் கஸ்டப்படுத்துவான், அவன் சொல்ற மாதிரி இஞ்ச ஏதாவது தொழில் பார்க்கலாம்தானே'

அக்கா மகேசுவிற்காக பரிந்து பேசத் தொடங்கினாள்.

"எவ்வளவு நாளைக்கு மாஸ்டரும் எங்களுக்காக உழைப்பைச் செய்து கொண்டிருப்பார், என்ர பிள்ளை, என்ர பிள்ளை என்டு எவ்வளவு நாள் நீ இரவில எழும்பி அழுதிருப்பாய்"

...அக்கா தொடர்ந்து கொண்டே போனாள். அம்மாவால் எதுவும் பேச முடியவில்லை. மகேசு வீட்டிற்குள் போனான்.

சூரியன் மெல்ல மெல்ல மேலே வந்து கொண்டிருந்தான். வீதியில் மீன்காரனின் சத்தம் கேட்டு பலர் பைகளுடன் வீடுகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தனர். காகங்கள் ஆகாரங்களுக்காக மரங்களையும் மதில்களையும் கைப்பற்றி காத்திருந்தன.

மகேசு அணிந்திருந்த சாரத்தை மாற்றி, நீளக்காற்சட்டையை அணிந்து கொண்டான். சந்தைக்கு போவதற்கு கையில் பையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

முற்றத்தை பெருமளவிற்கு அக்கா ஒழுங்கிற்கு கொண்டு வந்திருந்தாள்.

"மகேசு வந்து சாப்பிட்டு போவன்"

அம்மாவின் அறிவிப்பு முற்றத்தை எட்டியதும் மகேசு சேட்டுக் கையை மடித்தபடி குசினிக்குள் போனான்.

வீதியில் வழக்கமாக மக்கள் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். கடைகளுக்கு முன்னால் நின்றவர்கள் தினசரிப் பேப்பர் தலையங்கங்களை விவாதமாக்கிக் கொண்டிருந்தார்கள். சைக்கிளில் பெல் இல்லாதவர்கள் வாயால் ஆட்களை விலத்தியபடி போய்க்கொண்டிருந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகேசு இவற்றையெல்லாம் பார்த்தபடி பிரதான வீதியைக் கடந்து கொண்டிருந்தான்.

பிள்ளையார் கோவிலுக்கருகில் பதாகைகளுடன் கோசங்கள் எழுப்பியபடி ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது.

நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ஒருவர் "இனந்தெரியாத" சிலரால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டதை அடுத்து இந்த ஊர்வலம் மாணவர்களாலும் பொதுமக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மகேசு ஓரமாக நின்று ஊர்வலத்திற்கு வழி விட்டுக்கொண்டிருந்தான்.

வீதியின் ஓரங்களிலிருந்து அவனை மாதிரியே பலர் வழிவிட்டுக் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

....எல்லோரும் இப்படியே தங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லையென்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் இந்தச் சம்பவங்களை எப்படி தடுத்து நிறுத்துவது?. இப்படியே ஊமைகளாக இவர்கள் இருக்கும்வரை 'அவர்களும்' இதனை நிறுத்தப் போவதில்லை.

சமூகத்தில் இப்படி எல்லாரையும் 'இனந்தெரியாமல்", கொன்று குவிக்கும் இவர்களுக்கு இந்த அதிகாரத்தை யார் கொடுத்தார்கள். எல்லாமே விடுதலையின் பேரால் நடக்குதென்றால் விடுதலை யாருக்கு?

....மகேசு ஊர்வலத்தை பார்த்தபடி ஓரமாக நின்று கொண்டிருந்தபோது வயதான கிழவர் ஒருவர் மெல்ல மெல்ல அவனைக் கடந்து ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டார்.

ஏதோ யோசித்தவனாக மகேசுவும் ஊர்வலத்திற்கிடையில் ஆட்களோடு ஆட்களாக கலந்து கொண்டான்.

அவனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இரண்டுபேர் காரசாரமாக 'இனந்தெரியாத நபர்களை' விமர்சித்துக் கொண்டு போனார்கள். இன்னும் இரண்டு பேர் முழுமுரமாக துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஊர்வலம் பிரதான சந்தியை நெருங்கிக் கொண்டிருந்தது.

சூரியன் மேலே சுட்டெரித்துக் கொண்டிருந்தான். வாகனங்களின் நடமாட்டம் குறைவாக இருந்தது. ஊர்வலத்தின் தொகை முன்னைவிட இப்போ கூடுதலாக இருந்தது.

தெருவின் முடக்கு மூலையில் வான் ஒன்று அநாதரவாக நிறுத்தப் பட்டிருந்தது. பக்கத்தில் ஏராளமான விழுதுகளுடன் ஆலமரமொன்று வீதியின் பெரும்பகுதியை நிழலாக்கி கொண்டிருந்தது.

ஊர்வலம் அந்த முடக்கை தாண்டிக் கொண்டிருந்தது. மகேசுவும் அந்த முடக்கிலிருந்த வானைக் கடக்க முயற்சிக்கையில்.......

பெருத்த இடிமுழக்கமாக வானுக்குள் இருந்து வெடித்த குண்டு ஒன்று பல தீனக்குரல்களுடன் அடங்கியது

ஐயோ....அம்மா....என்கிற குரல்கள், ஊர்வலம் சிதறியோடியது. நிலமெங்கும் ரத்தத்துளிகளுடன் மனித உடல்கள். காயமடைந்தவர்கள் வலியால் துடிக்க...

மற்றவர்கள் அதிர்ச்சியிலிருந்து விடுபட சில நிமிடங்கள் ஆயின.

மாட்டுவண்டிகளும், வாடகைக் கார்களும் காயப்பட்டவர்களையும், பிரேதங்களையும் சுமந்துகொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி சென்று கொண்டிருந்தன.

இந்தச் சம்பவம் ஊர்முழுக்க பரவியதால் சிலர் அலறியடித்து இடத்திற்கு ஓடி வந்தனர்.

ஊர்வலத்தை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தவர்கள் ஆளுக்கொருவராய் விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள்.

"வானிலிருந்த குண்டுதான் வெடிச்சதாம்"

"கொஞ்ச முதல்தான் மூன்றுபேர் வானை இதில நிப்பாட்டிப் போட்டு போனவங்களாம்"

"வானில ஏதோ பழுதாம், அதுதான் இதில நிப்பாட்டினவங்களாம்"

"ஆமிக்கேதும் வைச்ச குண்டாக இருக்குமோ"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன இருந்தாலும் பொதுசனம் நடமாடுகிற இந்த இடத்தில கவலையீனமாக இதைச் செய்கிறதே"

'நமக்கேன் இந்த வில்லங்கம் என்று பலர் மௌனமாக இவற்றை கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

மகேசு எங்கே?

புவனத்திற்கும் மீனாட்சிக்கும் யார் சொல்லப் போகிறார்கள்?

எங்கோ ஒரு இடத்தில் காகங்கள் சில கத்திக் கொண்டிருந்தன.

அடுத்தநாள் காலை தினசரிகளில்,

தலையங்கமாக இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

"ஊர்வலத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பின்போது 15 பேர் பலி, 30 பேர் காயமடைந்தார்கள்"

இதற்கு காரணமானவர்கள் யார்?

இச்செய்திகளுக்கு கீழே சில அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருந்தன.

---

## மௌனத்தின் கொடூரம்

என்றைக்கும் போல,
மிதக்கும் முகில்களின் போர்வைக்குள்
வானம் இருந்து மெல்லிதாய் அழும்.
ஒளிரும் கிழக்கும் மங்கிப் போய் தூரத்தே மறையும்
கேள்விகளை எழுப்ப முடியாத
மௌனத்தின் இரைச்சலில்,

ஒரு மீளமுடியாத பயங்கரத்திற்கு
இங்கே அத்திவாரம் இடப்படுகிறது.

நிரந்தர மௌனத்திற்கு கிரீடம் அணிவித்த
இந்த திறந்த வெளிச்சிறைச்சாலையில்.....

அவன் அழிந்து போன சேதியை
அச்சுறுத்தப்பட்ட காற்று சுமந்து வரும்.

"அவன் அணைந்து போனான்"
என்று,
அவர்களின் சிறு நம்பிக்கையும் அணைந்து,

பின் மனசுக்குள் புகையும்,
தொடரும் அந்தக் கண்ணீரின் விசும்பலும்,
பெருமூச்சும்,
அடுத்த நிமிடம் கேட்கும்
பயங்கர சத்தத்தில் அடங்கிப் போகும்.

நிலத்தில் விழுந்து காய்ந்து கொண்டிருக்கும்
குருதி மட்டும்
மேல் விழும் பாதங்களில் பிசுபிசுத்து,
பிரியா விடையில் இரங்கும் இரகசியமாக
"இந்த மௌனத்தை விரட்டுவதெப்போ?"

துர்க்கா



www.tamilarangam.net

# செய்திகள்

யாழ்ப்பாணம் சண்டிக்குளியில் இயங்கி வரும் ஜெய்ப்பூர் செயற்கை கால் தயாரிப்புத் தொழிற்சாலை இம்மாதம் முதல் திகதியுடன் தனது இரண்டு வருட கால ஒப்பற்ற சேவையை பூர்த்தி செய்துள்ளது. கடந்த இருவருடகாலத்தில் சுமார் 300 செயற்கை கால், கை அவயங்களை மேற்படி நிறுவனம் உற்பத்தி செய்து உதவியுள்ளது. உள்ளூர், வெளியூர் அன்பர்களின் உதவியுடன் அன்னையர் முன்னணி நடத்திவரும் இந்நிறுவனம் இதுவரை 249 பேருக்கு செயற்கை கால்களையும், 8 பேருக்கு செயற்கை கைகளையும் பொருத்தியுள்ளது. மேலும் இங்கு பணிபுரியும் பலரும் செயற்கை உறுப்புகளோடுமே பணியாற்றி பிறருக்கு உதவும் பாங்கு அனைவரையும் கவரும் அம்சமாக உள்ளது. தொடர்ந்தும் கொடைவள்ளல்களினதும் பரோபகபரிகளினதும் நன்கொடைகளை இந்நிறுவனம் நாடி நிற்கிறது—

தமிழர்களுக்கான வாக்குறுதிகள் பூர்த்தியாகும் வரை இந்தியாப்படை இலங்கையில் இருக்கும். இலங்கை அரசினால் வழங்கப்பட்ட எந்த வாக்குறுதிகளையும் தமிழர்கள் நம்பத் தயாரில்லை. காரணம் அத்தகைய வாக்குறுதிகள் எதுவும் முன்னர் நிறைவேற்றப்படவில்லை. இந்தியா தமிழர்களுக்கு ஒரு உறுதிமொழி வழங்கியுள்ளது. அதனை காப்பாற்ற வேண்டும். அவர்களுடைய பாதுகாப்புக்கு நாம் உத்தரவாதம் வழங்கியுள்ளோம். அதனை நாம் காப்பாற்ற வேண்டும்.

— ராஜீவ் காந்தி

கூட்டணித் தலைவர்கள் மீதான கொலையானது நாகரிக உலகில் உள்ள எவராலும் மன்னிக்க முடியாத ஒன்றாகும். இதுபோன்ற அரசியல் போக்குகளுக்கு நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டும்.

—மேர்ஜ

வடக்கு கிழக்கில் அமைதியைக் கொண்டுவர இலங்கை இந்திய அரசாங்கங்கள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. ஆனால் இதன்பின்னரும் அப்பகுதியில் அமைதி ஏற்படவில்லை. மக்கள் சொல்லமுடியாத அளவிற்கு இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை எத்தனை நாளைக்குத்தான் தொடர விட்டுக் கொண்டிருப்பது? நல்லதொரு முடிவு உடன் காணப்படவேண்டும். இதற்காக இலங்கை இந்திய தமிழர் குழுக்கள் அடங்கிய முத்தரப்பு மாநாடு உடனடியாக கூட்டப்படவேண்டும். இதனை நிறைவேற்ற நாம் தொடர்ந்து முயற்சி எடுத்து வருவோம்.

—ஈரோஸ்

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் குறிக்கோளையும் பூரணமாக அடைவதை நோக்கமாக கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப், டெலோ ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து 'தமிழ் தேசிய சபை' என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளன. இச்சபை தொடர்ந்து தனித்துவமாக இருக்கும் அதேவேளை அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்து தேசிய சபையினூடாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் எதிரகால விடிவிற்காக முழுமையாக உழைக்க உறுதி பூண்டுள்ளோம். இன்றைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலகட்டத்தில் இத்தகைய சபையொன்று நிச்சயம் அவசியமானதாகும்.

முஸ்லீம் மக்களும் தமிழ்பேசும் மக்களைப்போல் கண்ணியம் கௌரவத்துடன் சமமாக வாழ இந்தச்சபை உத்தரவாதம் அளிக்கின்றது. வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களும் இங்குள்ள தமிழ்பேசும் மக்களுக்கு குந்தகமெதுவும் விளைவிக்காத பட்சத்தில் அவர்களும் தகுந்த பாதுகாப்புடனும் உரிமையுடனும் வாழ இடமளிக்கப்படும். கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக சில நிபந்தனைகளை முன்வைத்து பாராளுமன்றத்திற்கு போகாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த 13 உறுப்பினர்களில் 12 பேர் 21.07.89 அன்று பாராளுமன்றத்தில் சத்தியாப்பிரமாணம் செய்து எம்.பிக்களாக பதவி ஏற்றனர். எம்பிக்கள் விபரம் பின்வருமாறு:- ஜனாப் பசீர் சேகுதாவூத், திரு.தியாகராஜா புவனசுந்தரராஜா, திரு.இளையதம்பி ரத்தினசபாபதி, திரு.இளையதம்பி பரராஜசிங்கம், திரு.செபஸ்தியன்பிள்ளை எட்வர்ட், திரு.அழகப்போடி குணசீலன், திரு.கணபதிப்பிள்ளை செல்வநாயகம், திரு.மலையப்பன் ராமலிங்கம், திரு.குணசீலன் சௌந்தரராஜன், திரு.வேலாயுதம் கையிலபிள்ளை, திரு.சிவப்பிரகாசம் ரட்னராஜா ஜனாப் அனீஸ் பசீர் அமீர் ஆகியோர். பாராளுமன்றத்தில் கன்னி உரையை ரட்னசபாபதி நிகழ்த்தினர்.

22.07.89

கடந்த சனி,ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் மூன்று இளைஞர்களும்,ஒரு பெண்மணியும் சூட்டுக் காயங்களால் பலியாகியுள்ளனர். நீர்வேலியைச் சேர்ந்த மகாலிங்கம் மகேஸ்வரன் என்கிற மருத்துவக்கல்லூரி மாணவன் ஞாயிறன்று வீட்டினுள் வரப்பட்டு கோண்டாவில் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கனகசபை சிவனேசன் என்கிற சண்டிலிப்பாய் வாலிபர் இதே தினம் கொழும்பு செல்வதற்காக பஸ் ஏறவந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கந்தையா வேலாயுதகுமார் (24) என்கிற வாலிபர் கோண்டாவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சனியன்று ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ராஜலட்சுமி சீவரட்ணம் (38) என்கிற பெண்மணி யாழ் நாச்சிமார் கோவிலடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

25.07.89

மன்னார் மாவட்டம் அடம்பனில் இந்தியப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 3 இந்தியப்படையினரும் 33 விடுதலைப்புலிகளும் 3 பொதுமக்களும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.150 விடுதலைப்புலிகள் பங்குபற்றிய இம்மோதலில் 5 விடுதலைப்புலிகளின் முன்னணி உறுப்பினர்கள் இறந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

01.08.89

இடைக்காடு என்னுமிடத்தில் இரண்டு குழுக்கள் மோதிக்கொண்டதில் அப்பகுதியில் உள்ள வீடுகளும், வேலிகளும் தீயினால் நாசமாகியுள்ளன.

பண்டத்தரிப்புபகுதியில் உள்ள சந்தையில் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

கொட்டடி,இருபாலை ஆகிய பகுதிகளில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்டன. 21.08.89 அன்று காலை 7.30 மணியளவில் அல்வாயிலுள்ள பூமாஞ்சோலையிலும், வியாபாரி மூலையிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. இச்சம்பவத்தின்போது பத்து பொதுமக்கள் வரை உயிரிழந்தனர்.

3.08.89 ---- 14.08.89

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சம்பவங்களை பற்றி ஆராய விசாரணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஈழவர் ஜனநாயக முன்னணி அரசாங்கத்தையும், ஏனைய அரசியல் கட்சிகளையும் கேட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற பகிஷ்கரிப்பை நிறுத்திவிட்டு பாராளுமன்றத்திற்கு சமூகமளித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று யாழ் பலாலி வீதியில் கிடக்கக் காணப்பட்டது.

வல்லை வேம்படி வீதியால் சென்று கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

யாழ் பெருமாள் கோவிலுக்கருகில் காலையில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இலங்கை இனப்பிரச்சினையானது அதனோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் மீளமுடியாத பொறிக்குள் தள்ளியுள்ளது. இந்திய இராணுவத்தை அழைத்த இலங்கை அரசு இந்தியராணுவத்தை வெளியேறுமாறு கோருகிறது. அதேவேளை பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றியடையாத இந்திய அரசு வெளியேறமுடியாத நிலையிலுள்ளது. இதனால் இலங்கை அரசிற்கு உள்நாட்டில் எதிர்ப்பு வலுக்கிறது.

இலங்கை அரசின் கோரிக்கையின்படி இந்தியா வெளியேறு விட்டால், சர்வதேச ரீதியாக இந்தியா நெருக்கடிக்கும், அபகீர்த்திக்கும் உள்ளாகிறது. அதேவேளை பிரச்சினை தீராத இந்த நிலையில் வெளியேறினால் இந்தியாவின் பிராந்தியநலனுக்கு பாதிப்பு உண்டாவதுடன் ராஜீவின் நலனும் பாதிப்படைகிறது.

அதேவேளை இந்தியா வெளியேறாத பட்சத்தில் விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்கு முகம் கொடுக்கவேண்டி நேரிடும். இராணுவநடவடிக்கைகளால் மக்கள் தொடர்ந்து மாண்டவண்ணம் உள்ளனர். இதனால் இந்தியா நெருக்கடிக்கு உள்ளாகிறது இவற்றால் இந்தியா பெரும் அரசியல் பொறிக்குள் சிக்குண்டு தவிக்கிறது. அதேநேரத்தில் இலங்கை அரசும், சகல இயக்கங்களும் இதே பிரச்சினைப்பொறிக்குள் சிக்குண்டு ஒன்றையொன்று விடுபடாத நிலையில் தவிப்பதும் கவனிக்கத்தக்கது.

நன்றி: திசை 11.08.89

ஆகஸ்ட் மாதம் 2ந் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது ஆண்கள், பெண்கள் உட்பட 70 க்குக் குறையாத பொதுமக்கள் பலியானதுடன் சுமார் 300 வரையிலான கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்தியராணுவத்தின் மேல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து இச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. (பொதுமக்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அநாவசியமான உயிர்ப்பலிகளையும், சேதங்களையும் ஏற்படுத்தும் என்பதை கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் அனுபவரீதியாக உணர்த்தியபின்பும் இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது எதற்காக? )

18.08.89

ஆனைக்கோட்டைக்கு அருகே உயரப்புலம் பகுதியில் ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரான வி.அடைக்கலமுத்து (70), அவரது மகளான ஆங்கில ஆசிரியை நேச அருள்சோபா (25) ஆகிய இருவரும் அவர்களின் வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

24.08.89

மாலைதீவு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு கடந்தவருடத்தின் இறுதியில் சதிமுயற்சியை மேற்கொண்டமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கும் 12 இலங்கையர்களும், 4 மாலைதீவு வாசிகளும் அத்தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்திருக்கின்றார்கள். ஜனாதிபதி மௌமூன் அப்துல் கையூம் இந்த மேன்முறையீட்டை பரிசீலனை செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தவிர 59 இலங்கையர்களுக்கும் 11 வருடங்கள் தொடக்கம் 38 வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

23.8.89



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19.08.89 (வீரகேசரி)

திருகோணமலையிலுள்ள தமிழ்–சிங்கள அகதிகளுக்கென மாட்கோ பகுதியிலும், தென்னைமரவாடியிலும் 650 வீடுகளை அமைத்துக் கொடுக்க வட–கிழக்கு மாகாணசபை முடிவு செய்துள்ளது.
வீட்டு நிறுவனம் இதற்கான உதவியை வழங்குகிறது. இதேவேளை தென்னைமரவாடியில் சர்வோதயம் 150 தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க முடிவுசெய்துள்ளது.

இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய நியமனங்களை மேற்கொண்டு வருகிறது. இது மாகாண சபை சட்டமூலத்திற்கு எதிரான செயலாகுமென முதல்வர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் இன்று 4 ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் உள்ளனர் என்றும் அவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப் படவில்லையென அவர் தெரிவித்தார்.

மக்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டு வரும் 6700 பேரைக் கொண்ட மக்கள் தொண்டர்படையில் ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப்பிலிருந்து 1800 பேர் சேர்க்கப்பட்டு அது தற்போது செயற்படுகிறது. மீதி எண்ணிக்கை விடுதலைப்புலிகள், முஸ்லீம் காங்கிரஸ், டெலோ, புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்களிலிருந்து எடுக்கப்படும். தொண்டர்படையில் திறமையுடன் செயற்படுபவர்களை தகுதி கண்டு பொலிஸ்படையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11.08.89

வட கிழக்கு மாகாண ஆட்சிமுறை இந்த நாட்டின் வரலாற்றிற்கும், சமூக அமைப்பிற்கும் புதியது என்பதால் புரிந்துணர்வுகளில் பல சிக்கல்கள், சிரமங்கள், இடைவெளிகள் ஏற்படுகின்றன. பெரிய அளவிலான தியாகங்கள் நிறைந்த அதே அளவிற்கு ஆயுதங்களும் நிறைந்த போராட்டத்தின் ஒரு கட்டத்திலேயே மாகாண அமைப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இலங்கை அரசின் தகவல் சாதனங்களும், பி.பி.சியின் செய்திச்சேவையும் வல்வெட்டித்துறையில் நடந்தவற்றை மிகைப்படுத்தியுள்ளன. சனசந்தடி மிகுந்த சந்தை, பெற்றோல் நிலையம், உதயசூரியன் மதவடி ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகளில்தான் இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சம்பவதினம் அவ்விடத்தில் நின்ற இந்தியப்படையினர் மீது சுற்றியுள்ள கட்டிடங்களில் இருந்து விடுதலைப்புலிகள் எதிர்பாராதவிதமாக திடீர்த்தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனையடுத்து இந்தியப்படையினர் பதில்த்தாக்குதல்களை மேற்கொண்டனர். ஒருமணிநேரம் நீடித்த இத்தாக்குதலின்போது 24 பொதுமக்களும், புலிகள் 7 பேரும், இந்தியப்படையின் 6 பேரும் இறந்துள்ளனர். சனநடமாட்டம் உள்ள பகுதிகளில் அமைதிப்படையினருக்கு எதிராக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாலேயே இவ்வாறு உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

09.08.89 மாகாணசபை முதல்வர்

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலாவது வரவு செலவுத்திட்டம் (1989) மாகாணசபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்திற்கான உத்தேச திட்டச்செலவீனம் 8 கோடி 37 லட்சம் ரூபாம், மூலதனசெலவீனம் 11 கோடி 40 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய், துண்டு விழும் தொகை 5,80,26 000 ரூபாம் என மாகாணசபை நிதியமைச்சர் பெ.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் பயிற்சிக் கருத்தரங்குகள் உட்பட திருமலையில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டு, 1990 ம் ஆண்டளவில் 800 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் எனவும், மன்னார் பகுதியில் எரிபொருள் ஆய்வு வேலைகள் இந்தியா அல்லது ரஸ்யா உதவியுடன் செயல்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வித்துறை புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியும், நொராட் நிறுவனமும் அதிக உதவி வழங்கியுள்ளதாக வடக்கு கிழக்கு முதல்வர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களைக் கண்டுகொண்டும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைக்குப் போவதா?. இதனை எமது மக்கள் அனுமதிப்பார்களா? இதனை ஏற்க நாம் ஒருபோதும் தயாராக இல்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள்
31.08.89

இன்று நாட்டில் இடம்பெறுகின்ற குரூரத்தனமான கொலைகளை கண்டிப்பதில் திருச்சபை போதுமான அளவு வெளிப்படையாக முன்வரவில்லை. எங்கு நோக்கினும் தேவாலயங்களையும், விகாரைகள் பள்ளிவாசல்கள், மற்றும் ஆலயங்களையும் கொண்டிருக்கும் எமது நாட்டில் இது பெரும் கவலைக்குரிய நிகழ்வாகும்.

பாதுகாப்பு அமைச்சர் வல்வெட்டித்துறைக்குச் சென்று வன்முறை இடம்பெற்ற இடங்களில் நிலவரங்களை அவதானித்து இருக்கிறார். கிழக்கில் ஒரு வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த பெண்கள், சிறுவர்கள் என 21 பேர் இலங்கை ஆயுதப் படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடாத்த எந்த அமைச்சரும் அங்கு விமானத்தில் பறக்கவில்லை.

மட்டக்களப்பு பா.உறுப்பினர் திரு.காசிநாதர்
26.08.89

25.08.89 (வீரகேசரி)

எதிர்வரும் அக்டோபர் மாத முடிவுக்குள் இந்திய அமைதிப்படையினரை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ வால் அனுப்பப்பட்ட மீளாய்வு யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

12.08.89 (வீரகேசரி)

கடந்த இரண்டு வருடங்களில் நாட்டில் 1156 அரசியல் கொலைகள் இடம்பெற்றதாகவும் 354 பாதுகாப்புப் படையினர் கொலைசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

செய்திகள் நன்றி : வீரகேசரி, திசை.

21.08.89 (வீரகேசரி)

வன்செயலை கைவிட்டு யுத்தநிறுத்தம் செய்ய முன்வருமாறு ஜே.வி.பிக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணின் பூரண விடுதலை....

மீரா

எமது சமூக அமைப்பு முறையில் பெண்களின் நிலை காலகாலமாய் பின்தங்கிய நிலையிலேயேயுள்ளது. ஒரு பெண் தன் குடும்பத்தில் தங்கியிருக்க வேண்டியவளாகவும், ஒரு பெரும் சுமையாகவுமே கருதப்பட்டுவருகின்றாள். அவளின் செயற்பாடுகள் அனைத்தும் புறச்சூழ்நிலைமைகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. பெண்ணாக பிறந்தவர்களின் வாழ்க்கை, மணம் முடிப்பதும், குழந்தைகளைப் பெறுவதும் தான் என்ற எண்ணம் ஒவ்வொருவரின் மனங்களிலும் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. கூடிய விரைவில் தமது பெண்ணை மணம்முடித்துக் கொடுத்தால் தமது பாரம் குறைந்து விடுமென, மிக இளம்வயதிலேயே பெண்ணின் அபிப்பிராயம் கேட்கப்படாமலேயே மணம்முடித்துக் கொடுக்கின்றனர். இந்தக் கலாச்சாரத்திலே, பெண் என்பவள் பெற்றோருக்குச் சொந்தமில்லையென்றும், அவள் தற்காலிகமான பொருளென்றுமே கணிக்கப்படுகின்றாள். பெண் ஒரு சொத்தாகவே கருதப்படுகின்றாள். பெண் பிறந்ததிலிருந்து பெற்றோர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றார்கள்.

ஒரு பெண் குழந்தை பிறந்தவுடனே, அந்தக் குடும்பத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. குழந்தையாக இருக்கும்போதே " நீ பொம்பிளைப் பிள்ளை அடக்கமாக இருந்தால்தான் கல்யாணம் முடிப்பார்கள்" , என அந்தப் பிள்ளையை வேறு ஒரு விடயத்தைப்பற்றியும் சிந்திக்கவிடாமல் , மனதில் பெண்ணாகப் பிறந்தால் கல்யாணம் தான் வாழ்க்கை என்பதிக்க வைக்கின்றனர். பெண் சிறுவயதாக இருக்கும்போதே சீதனம் சேர்ப்பதிலும், நகைகளை சேகரிப்பதிலும் ஈடுபட ஆரம்பிக்கின்றனர்.

ஒரு பெண்ணின் வாழ்க்கை கல்யாணம் மட்டும்தான் என்கின்ற வட்டத்திற்குள் குறுக்கப்பட்டுள்ளது.

எமது சமூக அமைப்பில், பொதுவாக கல்வியறிவும் வெளியுலக விபரங்கள் அதிகம் அறியாதவர்களாகவுமே இருக்கின்றார்கள். தமது வெளிச்சூழலைப்பற்றி அறிய முன்பே, இளம் வயதிலேயே மணம் முடித்துக் கொடுப்பதால் அவர்களின் வட்டம் குடும்பத்துக்குள் குறுக்கப்பட்டு, சமூகத்துடன் முழுமையான தொடர்பு துண்டிக்கப்படுகின்றது. முடிவு அறிவுமில்லாத ஆணுடன் காலம்தோறும் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இதனால் குடும்பத்தில் புரிந்துணர்வு குறைவாகக் காணப்படுகின்றது. கூடுதலாக பணம், நிலம், அந்தஸ்து முதலியவற்றைக் கொண்டே பெண்ணின் வாழ்க்கை தீர்மானிக்கப்படுகின்றது.

எமது சமூகம் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையாதத் தன்மையால் ஒரு பெண் பெற்றோர்களில் தங்கி வாழவேண்டிய நிலையில் உள்ளது. ஒரு பெண் தனித்து வாழ சமூகஉதவி வசதிகள் நமது நாட்டிலில்லை. பெண்ணுக்கு படிப்புக்குச் செலவளிக்கும் பணத்தை சீதனமாக கொடுத்து, இளம் வயதிலே மணம் முடித்துக் கொடுத்தால் அவளுக்குப் பாதுகாப்பு என நினைக்கின்றார்கள். எமது சமூகத்தில் ஒரு பெண்ணுக்கு திருமணம் தான் பாதுகாப்பு வெனக் காலகாலமாக நம்பப்பட்டுவருகின்றது...

ஒரு பெண் தனது விருப்பத்திற்கேற்ப கல்விகற்று, பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருக்கவே வேண்டியநிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

([illegible]ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கம் பக்கம்

...ணித் தலைவர்கள் மீதான விடுதலைப் புலிகளின் படு
...ாலைகள் பலரது கண்களைத் திறந்து விட்டிருக்கிறது
...ாக பல ஞாபதையங்களை உருவாக்கியுள்ளது. இய
...த் தலைவர்களையும் கட்சித் தலைவர்களையும் அழி
...ாழிப்பதில் முன்னணி வகித்து வந்தவர்கள் விடுதலை
...லிகள் என்பது கடந்த கால கசப்பான உண்மைகள்
... சிறிசபாரத்தினம், ஒபரோய் தேவன், ஜெகன், ...
...கத் தலைவர்களையும், விஜயானந்தன், அன்மைலே,
...ு தற்போது திரு.அமிர்தலிங்கம், திரு.யோகேஸ்வர
வரை தொடர்ந்து வந்திருக்கிறது. இது தவிர பல
...கங்களின் முன்னணி உறுப்பினர்களையும், கட்சிகளின்
...கிய அங்கத்தவர்களையும் விடுதலைப் போராட்டத்தி
...பெயரில் பலி கொண்டுள்ளார்கள்.

கருத்து முரண்பாடுகள் விடுதலைப்
...ோராட்டத்தில் உருவாகுவது நியதி. அதற்கு தீர்வாக
...பாக்கிகளை நீட்டுவது எத்தகைய விளைவுகளை கொ
வரும் என்பது முன்னர் சில முற்போக்கான சக்தி
அடித்துக் கூறியபோது கண்டுக்காதவர்கள் இன்று
...ளனம் சாதித்துக் கொள்கிறார்கள். இவர்களில் சிலர்
...ந்துவதாகத் தெரியவில்லை. நாய் வாலை எப்படி
...ர்த்தமுடியும்?.

---

...ந்த சில நாட்களாக பலருடைய மனதில் எழுந்திரு...
...ம் சந்தேகம் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா?
...துதான். பல பத்திரிகைகள் பிரபாகரன் இறந்து
...டதாக செய்திகளை ...ியிட்டு பரபரப்பை ஏற்ப
...க் கொண்டன. இவற்றில் சில அவருக்கு வீரவணக்
...கதையும் செலுத்திவிட்டன. விடுதலைப்புலிகளின் லண்
... செயலகம் அவர் சாகவில்லை உயிருடன் இருக்கி...
...றார் என்று அறிக்கை விட்டாலும் மக்கள் மனதிலுள்ள சந்
தேகம் தீர்ந்து விட்டதாக தெரியவில்லை. வீடியோ
கசட் வந்தபின்தான் நம்புவார்கள் போலும்.

---

பிரபாகரன் நல்லபடியாக இருக்கிறார். அவர் கொல்லப்பட்
டதாக வெளியான தகவல்கள் எங்களுடைய அமைப்பிற்கு
கெட்டபெயர் ஏற்படுத்துவதற்காகவும், உலக மக்களைக்
குழப்புவதற்காகவும் இந்திய அரசு இட்டுக் கட்டி திட்டமி
ட்டு கெட்ட எண்ணத்துடன் பரப்பும் பொய்கள் ஆகும். இல
ங்கை அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையை தொ
டங்கியதில் இருந்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக புதுடெ
ல்லி கெட்ட எண்ணத்துடன் ஒரு புளுகு பிரச்சாரத்தை அவிழ்
த்து விட்டுள்ளது. இந்த தீவின் வடக்கு கிழக்கு பகுதியில்
தனது ராணுவம் தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காக
தற்போது நடந்து வரும் பேச்சுவார்த்தையை குலைப்பது
என்பதே இந்தியா பின்பற்றி வரும் உத்தியின் நோக்கமா
கும். எங்கள் தலைமையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படு
த்தும் நோக்கத்துடன் இந்திய அரசு நடத்தி வரும் இந்த
விசம பிரச்சாரத்தை விடுதலைப்புலிகள் ஆட்சேபிக்கிறது என்
பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— விடுதலைப்புலிகளின் லண்டன் அறிக்கை

நன்றி. மாலை முரசு 25.07.89

---

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் திரு.உமா
மகேஸ்வரனின் மரணம் குறித்து பல சந்தேகங்கள் ஆரம்ப
த்தில் எழுந்தாலும், அதன் புதிய தலைவர் திரு.மாணிக்க
தாசன் விடுத்த அறிக்கை இச்சந்தேகங்களை தீர்த்து வை
த்துள்ளதாக அறியப்படுகிறது. கழகத்தில் இருந்து பிரிந்து
சென்ற 7 பேர் மேற்கொண்ட சதி முயற்சியே இப்படு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொலைக்கு காரணம் திரு. மாணிக்கதாசன் குற்றஞ்சாட்டியுள்ளார். (இது இப்படியிருக்க, உமா மகேஸ்வரன் சாகவில்லை இறந்தது வேறு ஒரு நபர் என தமிழகத்தில் இருந்து வெளியாகும் ஜூனியர் விகடன் பத்திரிகை எழுதியுள்ளது. வர வர தமிழகத்து பத்திரிகைகள் சிலவற்றிற்கு புதுப்புது சந்தேகங்கள் உருவாகின்றன)

---

ஜூலை 13ந் திகதி மாலை 6.30 மணியளவில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த சிலர் தம்மைக் காண வருவதாக திரு. அமிர்தலிங்கம் பிற்பகல் 4 மணியளவில் என்னிடம் கூறினர். பின்னர் அவர்கள் வந்து என்னுடனும் திரு.அமிர்தலிங்கத்துடனும் திரு.யோகேஸ்வரனுடனும் பேசிக்கொண்டிருந்த போது திடீரெனத் துப்பாக்கியால் சுடத்தொடங்கினர்கள். வந்த நபர்களை நான் முன்னர் ஒருபோதும் காணவில்லை. திரு.யோகேஸ்வரன் அவர்கள் மீது நிறைய நம்பிக்கை வைத்திருந்தார். அதனுல் பாதுகாப்பு உத்தியோகத்தவர்கள் அவர்களைச் சோதனை செய்ய அனுமதிக்கப்படவில்லை. எனக்கோ திரு.அமிர்தலிங்கத்திற்கோ அவர்கள் மீது நம்பிக்கை இருக்கவில்லை. துப்பாக்கி சூட்டின்போது எனக்கு வலது தோளிலும் கையிலும் சூடு விழுந்தது. சூடுபட்டு யோகேஸ்வரன் விழுவதைக் கண்டேன். அமிர்தலிங்கம் ரத்தம் வழிய உணர்விழந்து கதிரையில் சாய்ந்தார்.

மரண விசாரணையின்போது திரு. சிவசிதம்பரம் கூறியது. தகவல் வீரகேசரி:22.7.89

தொகுப்பு: ஆதவன்

---

## கண்டனக்கூட்டம்

தமிழீழ மக்கள் விடுதலைக்கழக ஸ்தாபகர்ளில் ஒருவரான செயலதிபர் உமா மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து ஸ்ருட்கார்ட் நகரத்தில் 19.08.89 அன்று மாலை 4 மணியளவில் கண்டனக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தை மேற்கு ஜேர்மனி தமிழீழ மக்கள் விடுதலைக்கழக கிளை ஒழுங்கு செய்திருந்தது,

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் பற்றியும், அதில் தோழர் உமா மகேஸ்வரனின் பங்கு பற்றியும் கூட்டத்தில் பேசப்பட்டன. அத்துடன் கழகம் பற்றிய விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. சுமார் மூன்று மணித்தியாலயம் வரை இக்கூட்டம் நடைபெற்றது.

## அஞ்சலிக்கூட்டம்

விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்ட கூட்டணித் தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு.யோகேஸ்வரன் ஆகியோருக்கான அஞ்சலிக்கூட்டம் 22.07.89 அன்று மாலை 17 மணியளவில் ஸ்ருட்கார்ட் நகரத்தில் நடைபெற்றது.

கூட்டணித்தலைவர் கோழைத்தனமானமுறையில் கொடூரமாக கொலை செய்யப்பட்டதை பலரும் கண்டித்து பேசினர். திரு.அமிர்தலிங்கம் தமிழ் பேசும் மக்களுக்காக நடத்திய போராட்டங்கள் பற்றியும் பட்ட இன்னல்களையும் திரு.விஜயரட்னம் அவர்கள் குறிப்பிட்டு உரையாற்றினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடாவடித்தனங்களும் கொலைகளும்

கங்கா

அண்மையில் நடைபெற்ற கூட்டணித்தலைவர்கள் மீதான படுகொலைகளும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் கொல்லப்பட்ட சம்பவமும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியூட்டுவனவாக இருந்தாலும், விடுதலை என்கிற பெயரில் நடமாடிய ஆயுதம் தாங்கிய குழுக்களின் செயற்பாடுகளை ஆரம்ப காலமுதலே தொலை நோக்கோடு அவதானித்து வந்தவர்களுக்கு இச்சம்பவங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கமாட்டா. வன்முறையின் உச்சக்கட்டமேதான் இவ்வாறான ஆயுதப்படுகொலைகள். அரசியல் ரீதியாகத் தம்மை வளர்த்துக்கொள்ளாத இவ்வாயுதக்குழுக்கள் சில 'அராஜக நடவடிக்கைகள்' ஊடாக புரட்சி செய்ய நினைத்தார்களே தவிர, மக்கள் போராட்டம் பற்றியும், அதற்கான வழிமுறைகள் பற்றியும் பத்திரிகைகளில் ஆங்காங்கே எழுதிவிட்டு நடைமுறையில் தவறான அணுகுமுறைகளால் ஏற்பட்ட சிக்கல்களுக்கும், கருத்து பேதங்களுக்கும் தீர்வாக ஆயுதநடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இத்தகைய போக்குகளின் வெளிப்பாடுகள்தான் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் படுகொலைகளும், ஆயுத அடாவடித்தனங்களும் ஆகும்.

## கூட்டணித்தலைவர்கள் மீதான படுகொலைகள்.

கூட்டணித்தலைவர்களை படுகொலை செய்த சம்பவம் கோழைத்தனமானதும், காட்டுமிராண்டித்தனமானதுமான செயலும் ஆகும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் கூட்டணி உறுப்பினர்களை புறக்கணித்து தமது தீ[illegible]ப்பை வழங்கிய பின்னர், அத்தீர்ப்புக்கு மாறாக விடுதலைப்புலிகள் அவர்களைப் படுகொலை செய்தது மூலம் தமது அராஜக சர்வதிகார போக்கை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கூட்டணியினர் மீதான படுகொலைகள் இதற்கு முன்னர் இவ்வாயுதக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்டதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இக்குழுக்களின் இந்த செயற்பாடுகளுக்கு கூட்டணியினரும் ஒருவகையில் காரணகர்த்தாக்களாக அமைந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. இவ்வாயுதக்குழுக்கள் ஆரம்பகாலங்களில் கூட்டணியினரின் வழித்தோன்றல்களாக இருந்து வந்தவர்களே. பாராளுமன்றப்பாதையை நிராகரித்து இவ்விளைஞர் குழுக்கள் ஆயுதப்போராட்டவழிமுறையை மக்களின் விடுதலைக்கு தீர்வாக கொண்டனர். இவர்களுக்கு அப்போதிருந்த அரசியல் மூலதனமே கூட்டணியினரின் அரசியலானதமிழ்த் தேசிய வெறியுணர்வு மட்டுமே. மற்றப்படி எதுவித சமூகப்பார்வையோ அல்லது மக்கள் போராட்டம் பற்றியதான தெளிவோ இருக்கவில்லை. தன்னிச்சையாக தனிநபர் தலைமைகளில் செயல்பட்ட இவ்வாயுதக்குழுக்கள் ஆரம்ப காலநடவடிக்கைகளாக துரோகிகள், பொலிஸ் அதிகாரிகளை ஒழிப்பதிலும், வங்கிகள் போன்றவற்றை கொள்ளையிடுவதிலும் கவனம் செலுத்தினர். இவற்றைத்தான் ஆயுதப் போராட்டம் என்றும் பிரச்சாரம் வேறு செய்தனர்.

புரட்சி பற்றியும், அதன் வடிவங்கள் பற்றியும் கேள்விப்பட்டிராத மக்கள் மத்தியில் இக்குழுக்களின் செயற்பாடுகள் வரவேற்பை பெறத்தொடங்கின. பல இளைஞர்களை இவ்வாயுதக்குழுக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழ் அனிதிரளச் செய்தன. இந்த நிலமைகளை கவனத்திற் கொண்ட கூட்டணியினர் இவ்வாதக்குழுக்கள் சிலவற்றை தமது அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்திக் கொண்டனர். இந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட கருத்து மோதல்கள் நாளடைவில் கூட்டணியினருக்கெதிராக இவ்வாயுதக்குழுக்கள் தமது துப்பாக்கியை திருப்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் உச்சக் கட்டம்தான் அண்மைய படுகொலைகள்.

செயலதிபர் உமா மகேஸ்வரன் மீதான படுகொலை

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் மிக முக்கிய அமைப்பாக இருந்ததும், ஆரம்ப காலங்களில் ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்கான பல சிறப்பான அம்சங்களையும் அது கொண்டிருந்தது. தனிநபர் ஆயுதப்போராட்டத்தை நிராகரித்து மக்கள் போராட்டத்தைத் தீர்வாக அது முன்வைத்தபோது மக்கள் மத்தியில் அது வரவேற்பை பெற்றது. இதில் செயலதிபர் உமாமகேஸ்வரனின் பங்கு முக்கியமானதொன்றாகும். ஆனால் நாளடைவில் இவ்வியக்கம் உள்முரண்பாடுகளினாலும், அந்நிய சக்திகளின் ஊடுருவல்களாலும் மக்கள் மத்தியில் அது ஏற்படுத்தியிருந்த எதிர்பார்ப்பை தளரச்செய்ததுடன் பிளவுகளையும் எதிர்நோக்கியது. இந்த நிலமைகளின் நிமித்தம் இவ்வியக்கம் தன்னை புனரமைத்துக் கொள்ளத்தவறியதன் விளைவு செயலதிபர் உமாமகேஸ்வரனின் மரணத்திற்கு வழிகோலியது. இக்கொலையை கழகத்திலிருந்தே பிரிந்து சென்றவர்கள் மேற்கொண்டதிலிருந்தே இது நிரூபணமாகிறது.

அவர் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலையானது மனிதநேயமற்றதும், அவர் மீது விமர்சனங்களை முன்வைக்கத்தவறும் அல்லது பின்வாங்கும் செயற்பாடும் ஆகும். படுகொலைகள் பிரச்சினைக்கு தீர்வாகாது. அரசியல் ரீதியாக மக்கள் முன் முகம் கொடுக்க மறுக்கும் செயல் மட்டுமல்ல, மக்களின் தீர்ப்பை நிராகரிக்கும் அல்லது புறக்கணிக்கும் தன்மையுமாகும்.

போட்டிக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகள்.

கடந்த சில காலங்களாக போட்டிக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் 'இனந்தெரியா கொலைகளில் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. விடுதலைப்போராட்டம் ஆயுதம் தாங்கிய குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட காலந்தொடக்கம் இம்மாதிரியான கொலைகளை மக்கள் நாளாந்தம் சந்திக்கத் தொடங்கினர். உரிமைகோரப்பட்டும், உரிமைகோரப்படாமலும், இனந்தெரியாமலும் நடந்தேறிய இக்கொலைகளில் பெரும்பாலானவை தேசத்துரோகிகள், சமூகவிரோதிகள், உளவாளிகள் என்கிற நியாயப்படுத்தல்கள் மூலம் அரங்கேறின. இதை மேற்கொள்ளும் ஆயுதக்குழுக்கள் ஒவ்வொன்றும் தாம் செய்யும் கொலைகளை நியாயப்படுத்தியும், மற்றவர்கள் செய்வதை எதிர்த்தும் வந்துள்ளன.

மத்தியதர வர்க்கத்தின் குட்டிப்பூர்சுவா தன்மைகளினை பெருமளவில் கொண்டிருந்த இவ்வாயுதக்குழுக்கள் தம்முள் குழுவாதம், கோஷ்டி வாதம் ஆகியவற்றை உள்ளேயும், வெளியேயும் கொண்டிருந்தன. தனிநபர் வழிபாடு, போட்டிமனப்பான்மை, அதிகாரப்போட்டிகள் இவைகளுக்குள் சிக்கித்தவித்த இவ்வாயுதக்குழுக்கள் ஒன்றையொன்று அழிக்க அல்லது கட்டுப்படுத்த முயன்றன. யார் கூடுதலான தாக்குதல்களை செய்வது?, யார் கூடுதலான துரோகிகளை, சமூகவிரோதிகளை அழிப்பது? என்பவற்றில் ஏற்பட்ட போட்டியும், இதனால் மக்கள் மத்தியில் பெற முயன்ற செல்வாக்கும் நாளடைவில் குழுக்களிடையே பிளவுகளையும், உயிர்ப்பலிகளையும் ஏற்படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவரின் நடவடிக்கைகளை மற்றவர் கண்டித்தல், தவறான பிரச்சாரத்தை ஏனையோர் மீது மேற்கொள்வதன்மூலம் தம்மை வளர்த்துக் கொள்ள முற்படுதல், ஒரு கொலையைச் செய்துபோட்டு மற்றவர் மீது பழியைப் போட்டு தப்பிக் கொள்ளல், ஆயுத அராஜகத்மூலம் ஏனையோரை அழிக்க நினைத்தல் அல்லது தடை செய்ய முயலுதல் இது போன்ற பல நடவடிக்கைகளை இவ்வாயுதக்குழுக்கள் மேற்கொண்டன. இத்தன்மைகளால் மக்கள் மத்தியிலிருந்து எழுந்த எதிர்ப்புக்கள் யாவும் ஆயுதங்கள் மூலம் அடக்க முயன்ற இவ்வாதக்குழுக்கள் மேற்கொண்ட அனைத்து உயிர்ப்பலிகளும், சகங்களும் அரச ரானுவங்களினால் மேற்கொள்ளப்பட்டதை பார்க்கிலும் எதுவிதத்திலும் குறைந்ததல்ல.

தவறான வழிமுறைகளும், அதன்காரணமாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளும் இவ்வாயுதக்குழுக்களை போராட்டப்பாதையிலிருந்து அன்னியப்படுத்தியும் இன்று பொது எதிரியிடம் மண்டியிட்ட நிலையை ஏற்படுத்திய பின்னரும் இப்படுகொலைகளை நிறுத்துவதாக இல்லை. கீழ்வரும் செய்திக்குறிப்பு அண்மைக்காலங்களாக ஈழத்தில் இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகளை சுட்டிக் காட்டுகிறது.

'கடந்த இரு மாதங்களிலும் யாழ் மாவட்டத்தில் கொலைகள் அதிகரித்துள்ளன. இந்த மரணங்களில் அனேகமானவை துப்பாக்கிச்சூட்டுக் காயங்களினால் ஏற்பட்டவை என்றும், இவை பெரும்பாலும் ஆயுதப்படையினராலும், ஆயுதம் தாங்கிய குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறை கொல்லப்பட்டவர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. மற்றும் ஆயுதப்போட்டிக்குழுக்களினால் மாணவர்கள் கடத்திச் சென்று, சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்களுக்கும், அவர்களின் முக்கிய போட்டிக்குழுவிற்குமிடையே விசித்திரமான ஆனால் கோரமான கொலைகள் நடைபெற்றுள்ளன .......

இப்பத்திரிகைச் செய்தியை நோக்கும்போது இவை யாவும் பழிவாங்கல் நடவடிக்கைகளாகவே நடைபெற்று வருவதை அவதானிக்கமுடிகிறது. மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவும் இவ்வாயுதக்குழுக்களின் ஆயுதஅராஜகங்களினால் மழுங்கடிக்கப்படுவதையும் இதன் பின்னணியில் வைத்து நோக்க முடிகிறது.

**கர்த்தால், பகிஷ்கரிப்பு, ஊர்வலங்கள், நிரவாகச்சீர்குலைப்புகள்**

மேற்கூறப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் போராட்ட வடிவங்களாக இவ்வாயுதக்குழுக்கள் தற்போது மேற்கொண்டுவருவதை அவதானிக்கமுடிகிறது. கடந்த காலங்களில் இச்சம்பவங்கள் இக்குழுக்களால் அரசுக்கெதிரான ஒழுங்குபடுத்தப்பட்ட ஆக்கபூர்வமான போராட்டங்களாக முன்னெடுக்கப்படாமல், இயக்கப்போராளிகளின் இறப்புக்களுக்கு துக்கம் அனுஸ்டிக்கவும், மக்கள் ஆதரவு தமக்கு உண்டென்பதை காட்டுவதற்காகவும் பலவந்தமாக ஆயுதமுனைகளில் தமது அரசியல் லாபங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வந்தன. மக்களை இப்போராட்டவடிவங்கள் அரசியல் மயப்படுத்துவதற்குப்பதிலாக விரக்தியுறவைத்தன. இதற்கு காரணம் இக்குழுக்கள் இவற்றை பலவந்தமாக மேற்கொள்ளமுயன்றதே. ஒரு சில சம்பவங்கள் ஆக்கபூர்வமானவற்றிற்கு பயன்படுத்தப்பட்டாலும் பெரும்பாலானவை இக்குழுக்களின் தேவைக்கேற்ப நடாத்தப்பட்டன.

அமைதியும் ஜனநாயகமும் மக்கள் மத்தியில் உருவாக வேண்டுமானால் அதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் மத்தியிலிருந்தே உருப்பெற வேண்டும். இதை உருவாக்க நினைக்கும் எந்த ஒரு சக்திகளாயினும் சரி மக்களை நேசிக்க கற்றுக் கொள்வதோடு அவர்களுக்கு, அவர்களது கருத்திற்கு மதிப்பளித்தும், அவர்களுக்கு பாதுகாப்பாகவும் நடந்து கொண்டாலொழிய அமைதியையும் ஜனநாயகத்தையும் உருவாக்க நினைப்பது கடினமாகத்தானிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆதரவு தரும் ஜெயிப்பூர் நிறுவனம்

யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் பாதத்தொழிற்சாலை 1.07.89 அன்று தனது இரண்டாவது ஆண்டுகளை சிறப்பாக பூர்த்தி செய்துள்ளது. கடந்தகாலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது கை கால்களை இழந்தவர்களுக்கு இந்நிறுவனம் பெருந்தொண்டாற்றி வருகிறது. இதுவரை இந்நிறுவனம் 237 ஜெய்ப்பூர் அங்கங்களை பொருத்தியுள்ளது. பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், அதிகரித்து வரும் விலைவாசிகளுக்குமிடையிலும் குறைந்த செலவில் அங்கங்களை ஊனமுற்றோருக்கு பொருத்தி வருகிறது. உள்நாட்டு,வெளிநாட்டு நன்கொடைகளாலும், உதவிகளாலும் மட்டுமே இது சாத்தியமாகிறது. அத்துடன் இத்தொழிற்சாலையை நவீன தொழிற்நுட்ப வசதிகளுடன் விஸ்தரித்து இளம்பிள்ளை வாதநோய்களுக்கும், நரம்பு சம்பந்தமான வேறுநோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும் உறுப்புக்களை பொருத்தக்கூடிய ஒரு நிறுவனத்தை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## ஜெய்ப்பூர் செயற்கைக் கால்

ஜெய்ப்பூர் அங்கமானது இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் நகரத்தில் உருவாக்கப்பட்டது. சாதாரண இந்திய மக்களது தேவைகளுக்கு பொருத்தமாக அமைந்தது. இது எலும்புச்சிகிச்சை நிபுணரான டாக்டர் பி.கே.சேத்தி என்பவரால் உருவாக்கப்பட்டது. இலங்கை மக்களுக்கும் இவ்வகையான அங்கமே மிகவும் பொருத்தமானதாகும். இது உறுதியானது என்பதோடு பார்வைக்கும் உண்மையான அங்கம்போல் தோற்றமளிக்கும். இதனை மேற்கத்தைய அங்கங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இது பாரம் குறைந்ததாகவும், விலை குறைந்ததாகவும் இருக்கின்றது. ஜெய்ப்பூர் அங்கமானது கால் துண்டிக்கப்பட்டவரை சமனற்ற தரையிலும், சேற்றிலும், நீரிலும் நடக்கவும், மரங்களில் ஏறவும், மலைகளை கடக்கவும், துவிச்சக்கர வண்டியில் ஓடவும், குந்தி இருக்கவும் சப்பாணி கட்டி இருக்கவும் அனுமதிக்கிறது. இதைவிட ஜெய்ப்பூர் காலினை மிக விரைவாகவும், இலகுவாகவும் உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளது. இதனை அடிக்கடி பழுது பார்க்கவும் தேவையில்லை.

## உதவிக்கரங்களை நோக்கி....

ஒரு பொதுநல நோக்குள்ள அன்பர் ஒருவர் கண்டுக்குளியிலுள்ள தனது இல்லத்தை இந்நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு கொடுத்துதவியுள்ளார், இவற்றை விட பல உள்ளூர் பொது ஸ்தாபனங்களும், தனிநபர்களும் உதவியளித்தாலும் இந்நிறுவனத்தின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய இவை போதியனவாக இல்லை.

பணம் கொடுக்க வசதியற்ற அங்கவீனர்களுக்கு அங்கங்கள் பொருத்த தேவையான பணம் நன்கொடைகள் மூலமே கிடைக்க வசதியளிக்கப்படுகிறது. வருங்காலத்தில் கைகளை இழந்தோருக்கும், வியாதியால் கை,கால்களின் செயற்பாட்டை இழந்தோருக்கும் உதவ முயற்சி எடுக்கும் அதேவேளையில், உற்பத்திக்கு தேவையான பாகங்களையும் எமது மண்ணிலே தயாரிக்கவும் இந்நிறுவனம் முயற்சி செய்து வருகிறது.

இவற்றிற்கான பொருளாதார தேவைகளை நிவிர்த்தி செய்ய இந்நிறுவனம் பொதுமக்களினதும், பொதுஸ்தாபனங்களினதும் உதவிகளை நாடி நிற்கிறது.

தொடர்புகளுக்கு: The Hony Treasurer,
Jaipur Foot Workshop,
5, Old Park Road,
JAFFNA.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




1




3

1. செயற்கை கை பொருத்தப்பட்ட பெண் ஒருவர்.
2. முன்னர் பாவனையிலிருந்த செயற்கை கால்
3. நவீன முறை செயற்கை கை, கால்களை தயாரிக்கும் தொழிலாளர்.
4. நவீன முறையிலமைந்த செயற்கை கால்.



2



4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சு பொறுக்குதில்லையே .....

ஊர்க்குளவி

நமது நாட்டு நிலைமையை நோக்கினால் இன்னும் அங்கு வாழும் மக்கள் பூரண சுதந்திரமாக வாழமுடியாத நிலையாகவேயுள்ளது. மக்களுக்கு கிடைத்த தற்காலிக சுதந்திரத்தையாவது முழுமையாக அனுபவிக்க இயலாமல் அராஜகம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இராணுவ அராஜகங்களினால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த மக்கள் சற்று ஜனநாயக அரசியலினூடாக அமைக்கப்பட்ட ஒரு நிலைமையில் வாழ முயற்சிசெய்துகொண்டிருக்கும் வேளையில் இயக்கங்களின் அராஜகம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட இயக்கங்களினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகம்.

நமது தேசிய விடுதலை போராட்டம் ஆரம்பித்த பின்பு, ஒரு சிலர் ஆயுதங்களுடன் உலா வர மீதி மக்கள் வாய்மூடி மௌனிகளாக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் தனிநபர் கொலைகள் நடைபெறும் போது, தமிழ் துரோகிகள் கொல்லப்படுகின்றார்கள் என மக்கள் ஆதரித்தனர். சற்று காலத்துக்குப்பின் "சமூகவிரோதிகள்" என தம்மாலேயே தீர்ப்பளிக்கப்பட்டு, பலர் மின்கம்பங்களிலும், மரங்களிலும் தொங்கப்பட்டனர். இவ்வாறு இவர்கள் கொலை செய்தவர்களில் பெரும்பான்மையினர் ஒடுக்கப்பட்ட சாதியினைச் சேர்ந்தவர்கள் ஆதலால் வடக்குபகுதி மக்கள் தங்களுக்கேயுரிய குணம்சத்தால் நியாயப்படுத்தினர். இவற்றை எதிர்த்தவர்களும் தாக்கப்பட்டனர். பாடசாலை அதிபர்கள் கொல்லப்பட்டனர், மாணவர்கள் கடத்தப்பட்டு, நாக்கு வெட்டப்பட்டு கொல்லப்பட்டனர், மாற்று கருத்து இருந்ததினால் யாருக்கும் தெரியாது புதைக்கப்பட்டனர், ஒரே நோக்குடன் களத்தில் இறங்கிய சகபோராளிகளை வேறு இயக்கங்களில் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் மட்டும் மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டனர். புத்திஜீவிகள், அரசாங்கசேவையாளர்கள், இடதுசாரிகள், இன்னும் பல அரசியல் பிரமுகர்கள் கொல்லப்பட்டனர், இன்னொரு இயக்கத்தில் அங்கம்வகித்த போராளிகளின் குடும்பங்கள் அழிக்கப்பட்டன.

இவையெல்லாம் நடக்கும்போது மக்களின் அபிப்பிராயங்கள் கேட்கப்படவில்லை. அவர்களின் வாய்கள் இறுக்கி மூடப்பட்டன. தங்களுக்குத்தேவையானபோது மட்டும் மக்களை கேடயமாக உபயோகித்தனர். இந்த நிலை இன்னும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. தமது சொந்த மண்ணிலேயே தமது சுதந்திரமான கருத்தை தெரிவிப்பதற்கு தம்மவர்களுக்கே பயந்து வாழவேண்டிய நிலையாகவேயுள்ளது. இன்று நடக்கும் அராஜகத்திற்கு ஒருவிதத்தில் மக்களும் காரணமாகும். இவர்கள் ஆரம்பத்திலிருந்தே கவனக்குறைவாக "நாங்கள் தப்பினால் போதும்" என்று இருந்தபடியால், நிரந்தரமாக அவர்களுக்கு பார்வையாளர் இடம் ஒதுக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு கட்சியைச் சேர்ந்த பிரமுகர் கொல்லப்பட்ட போது, அதை எதிர்த்து ஒரு கண்டனமும் தெரிவிக்காமல் சந்தர்ப்பவாதிகளாக இருந்தமையால், இன்று அவர்களுக்கு நேரே துப்பாக்கி நீட்டப்பட்டது. இந்த நிலை இவ்வாறு தொடருமானால், எமக்கு ஒரு வாய் இருக்கவேண்டிய அவசியமில்லை. துப்பாக்கிகளே அதன் வேலையைச் செய்யத்தொடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது சொந்தமண்ணில் நடக்கும் மனிதத்தன்மையேயில்லாத செயல்களை அறிந்தும் அறியாதுபோல் இங்கு பலர் இருக்கின்றனர் என நினைக்கும் போது வருத்தமாகவேயிருக்கின்றது. அங்கு நடைபெறும் அராஜகத்தை, அராஜகவாதிகளைவிட வெளிப்படையாகவே நியாயப்படுத்துகின்றனர். போராட்டத்தைக் காட்டிகொடுத்தவர்கள் ஆகையால் அவர்களுக்கு தண்டனை அவசியமென்றும், உண்மையான குற்றவாளிகளை அறிந்தும் அவர்களை கண்டிக்க துணிவில்லாமல் பின் நிற்கின்றனர், இவர்களுக்காக எம் கண்ணிலிருந்து கண்ணீர்வராது, இவர்களுக்காக சிந்தப்படும் கண்ணீர் "தலைக்கண்ணீர் என அராஜகத்தை நியாயப்படுத்துபவர்கள், இந்தக்கண்ணீர் அங்கு வாழும் ஒவ்வொருவருக்காவும் சிந்தப்படும் கண்ணீர் என்பதை மறக்கின்றனர். (இங்குள்ளவர்களுக்கும் தான்)

நாட்டு நிலைமையை பிரதிபலிக்க வேண்டிய பத்திரிகைகளே இந்த அராஜகத்தை இருட்டடிப்பு செய்கின்றனர். காலத்தை பிரதிபலிக்காத விடயங்களால் பக்கங்களை நிரப்புகின்றனர். அராஜகத்தை எதிர்ப்போம், பாசிசத்தை எதிர்ப்போம் என பக்கத்திற்குபக்கம் "முற்போக்காக" எழுதும் சஞ்சிகைகளுக்கே இந்த நிகழ்ச்சிகள் தெரியவில்லை.

ஒருவேளை இவர்கள் தங்கள் கட்டுரைகளைக் கவர்ச்சியாக முடிப்பதற்காகத்தான் இவ்வாறு எழுதுகிறார்களோ தெரியாது. நமது நாட்டு அராஜகத்தைப் பற்றி எழுதாமல் வேறு எந்த நாட்டு அராஜகத்தைப்பற்றி எழுதப் போகிறார்கள்?

எங்கு வாழ்ந்தாலும் எமக்கு முன்னால் இப்போது துப்பாக்கிகளே நிற்கின்றன. எமக்கு எந்தவிதமான மாற்று கருத்து இருந்தாலும் மனிதாபிமானத்திற்கே நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். அராஜகத்தை எதிர்ப்பதன்மூலம் தான் மக்கள் சுதந்திரமாக வாழமுடியும்.

(18ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர்களிடமும், சகோதரர்களிடமும் தங்கி வாழாது தனது சுயவிருப்பத்திற்கேற்ப இருக்க முற்பட்டால் அதுவே உண்மையான பாதுகாப்பாகும். இந்த சமூக அமைப்பு முறையில் பொருளாதார ரீதியில் மற்றவர்களில் தங்கி வாழாத நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.... அத்தகைய நிலையில் அனைவருக்கும் வருங்காலத்தில் உத்தரவாதம் ஏற்படும். பெண்ணின் வாழ்க்கை திருமணம் தான் என்பது மாற்றப்படவேண்டும்.

கல்விவளர்ச்சியும், பொருளாதார சுதந்திரங்களும் ஏற்படும் போது, திருமணத்தைப்பற்றிய முடிவுகள் அவளாலேயே தீர்மானிக்கப்படும்...

தேனீ

இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது

ஆசிரியர்குழு – தேனீக்கள்

தனி இதழ் – 3 டிஎம்.

வருடசந்தா – 20டிஎம்.

ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத்தொடர்புகளுக்கும்

THENEE
ALLEEN STR 17.
7144 Asperg.

G.Kanagatharan
Konto Nr.7817998054
BLZ 600 501 01
Landesgirokasse
7144 Asperg.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

தேனியாருக்கு,

தனித்தமிழீழமே இனி எம் இறுதியான, உறுதியான முடிவென்று தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டு, விடுதலைக்குக் குழிபறித்துக் கொண்டிருக்கும் ஆயுதக் குழுக்கள் சிலவற்றுடனும், இந்தியாவுடனும் ஒப்பந்தம் செய்து, இந்திய இராணுவம் இலங்கையுள் வந்து ஆயிரமாயிரம் பொதுமக்களின் உயிர்கள் பலியாகக் காரணமாக இருந்தவரே திரு. அமிர்தலிங்கம். இன்றுவரை எத்தனை ஆயிரம் மக்கள் அடிஅடிக்க துப்பாக்கிச்சூட்டிலும், செல்லடியிலும் மாண்டார்கள். மாண்டுகொண்டிருக்கின்றனர். இவர்களுக்குச் செய்யாத கண்ணீர் அஞ்சலி திரு. அமிர்தலிங்கத்திற்கா? உங்கள் கண்ணீர் முதலைக்கண்ணீர்.

தாம் கற்றவற்றை மற்றையோருக்கும் பயன்படக்கூடியவகையில் எடுத்துக்கூறுவதே கற்றவர் கடமை. அப்படிப்பட்டவர்களது எழுத்துக்களை பழசுகள் என்றும், படித்தவற்றை ஒப்புவிக்கிறார்கள் என்றும், நகை நட்டுகளைப் பற்றி எழுதுகிறார்கள் என்றும் கொச்சைப்படுத்தி எழுதுகிறீர்கள். நீங்கள் எழுதுவது எல்லாம் புதிதா? புதுமையா? நீங்களும் யார் யாரோ எழுதிய பழையதுகளை வாசித்து விட்டுத்தானே எழுதுகிறீர்கள்.

ஹாகன் — நித்தியா

தேனி ஆசிரியர் குழுவிற்கு,

ஆயுதம் தாங்கிய குழுக்களிலே விடுதலைப்போராட்டம் சீர்கேடாகி போய்விட்டபின் கூட்டணித் தலைவர்கள் மீதான படுகொலைகள் குறித்து ஆச்சரியம் கொள்வதில் அர்த்தம் ஏதும் இல்லை. விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டுவதில் எவ்வித பயனும் இருப்பதாக தெரியவில்லை.

இந்தப் படுகொலைகளை செய்ததன் மூலம் விடுதலைப்புலிகள் தாம் தமது பாதை இப்படித்தானிருக்கும் என்பதை தெட்டத் தெளிவாக காட்டியுள்ளார்கள். அவர்களை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ள எமது சமூகம் இன்னும் பல படிப்பினைகளை கற்றுக்கொள்ள நேரிடலாம்.

பிரான்ஸ் — பாலமூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மாலைதீவில் இலங்கைத்தமிழர்களுக்கு எதிராக வழங்கப்பட்டிருக்கும் தூக்குத்தண்டனைத்**

**தீர்ப்பை நிறுத்தக் கோரும் விண்ணப்பம்.**

ஐயா,

மாலைதீவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களில் 12பேருக்கு எதிராக வழங்கப்பட்டிருக்கும் தூக்குத்தண்டனைத்தீர்ப்பை நிறுத்தி, அத்தண்டனையில் இருந்து மன்னிப்பு வழங்கச்செய்யும்முயற்சி-யில் தங்களால் ஆன நடவடிக்கைகள் ஊடாக உடன்தலையிட வேண்டும் என ஜேர்மனியில் வாழ் இலங்கைத் தமிழர்கள் சார்பாக தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறோம்.

மாலைதீவில் சட்டத்துக்குமாறாக நடந்துகொண்டவர்களுக்குதண்டனை வழங்கும் உரிமை அந்நாட்டிற்கு உண்டுஎன்பதை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நாம் அவர்களுக்கு வழங்க எத்தனிக்கும் மரணதண்டனையை மறுபரிசீலனை செய்து மன்னிப்பு வழங்கவேண்டும்என்பதை அமைதியை நாடிஉலகில் வளர்ந்துவரும் மனிதநாகரிகத்தின் பெயரால் கீழ்ப்படிவோடு விண்ணப்பமாக முன்வைக்கிறோம்.

வளர்ந்துவரும் உலகநாடுகளில் தொகுதிகளிலே தோற்றம் இவ்வகை மரணதண்டனைகளுக்கு எதிராக பெருகிவரும் போராட்டங்களையும் ஆதரவுகளையும் அமைதிமண்டலத்துக்கான ஆரோக்கியமான வளர்ச்சியாக ஆர்வத்துடன் எதிர்பார்த்துவரும் இலங்கைத்தமிழர்களான நாம் தெற்காசிய பிராந்திய மண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டுவரும் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக அப்பிராந்தி நாடுகளில் ஒன்றான மாலைதீவில் நடாத்தப்பட எத்தனிக்கும் மேற்படி மரணதண்டனைகளையும் அமைதிக்குஅச்சுறுத்தலான மனிதநேயத்திற்கு-எதிரான ஒரு நடவடிக்கையாகவே பார்க்கிறோம். எனவே மனித நேயத்திற்கு மதிப்பளித்து முற்றிலும்மனிதாபிமான அடிப்படையில் ஒத்திப்பதில் தலையிட்டு தூக்குத்தண்டனைகளை நிறுத்தும் நடவடிக்கைகளில் -உடன் ஈடுபடவேண்டும் என்ற தாழ்மையான விண்ணப்பத்தினை ஜேர்மனியில் வாழ்கின்ற அனைத்து தமிழர்கள் சார்பாகவும் கீழ்ப்படிவோடு முன்வைக்கிறோம். இவ்விண்ணப்பத்தினை நிறைவேற்ற சகலநடவடிக்கைகளிலும் ஈடுபடுவீர்கள் என்று தங்கள் நாட்டையும் மக்களையும் நேசிக்கும் உண்மையான இலங்கைத்தமிழர்களான நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம்.

நன்றி

ஜேர்மன் வாழ் இலங்கைத்தமிழர்

ஆர்.உதயகுமார்,
மன்ச்காஸ்டன் சிராச 109,

7000சுருட்காட் 1.

www.tamilarangam.net

## இன்று நான் பெரிய பெண்

நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்.

பூவைப் போலவும்
காற்றைப் போலவும்
நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து
சுற்றிய பருவத்தில்

காலை உதைத்து
வீரிட்டு அழவும்
கல கல என்று
கை தட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால்
கொப்பியைக் கிழிக்கவும்
முடிந்த காலம்,

மரத்தில் ஏறவும்
மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப்
பிள்ளைகளுடனே
கிட்டி அடிக்கவும்
ஒளித்துப் பிடிக்கவும்
ஒன்றும் பேசிலர் எவரும்.

இன்று
நான் பெரிய பெண்.
உரத்துச் சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை;
நாணம்
பெண்மையின் அணிகலம்.
கதைத்தல் ; சிரித்தல்;
பார்த்தல் ; நடத்தல்;
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி....

நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய்........

அ.சங்கரி

நன்றி: சொல்லாத சேதிகள்.